Koviloor Digital Library

164

உ

திருச்சிற்றம்பலம்

சைவசமய விரதாதி விளக்கக் கொத்து

2524

சைவசமயத்தார்
மேற்கொள்ள வேண்டிய
நோன்புகளைப் பற்றி
விளக்குவது.

PRESE... BY:
V. ... M.
KASIVIS... CHETTIAR
PAGANERI.

No:5
KVL0728
3.

தென்னிந்திய சைவசித்தாந்த சங்கம்,

திருநெல்வேலி.

விலை அணா 6

Koviloor Digital Library

Koviloor Digital Library

164

உ

சிவமயம்.

2527

சைவ சமய விரதாதி விளக்கக்கொத்து.

PRESENTED BY
V. PR. PL. M. KASIVISVANATHAN CHETTIAR TO
THIRUVALLUVAR LIBRARY, PAGANERI.

இளைஞர் தமிழ்ச் சங்கம் Y. M. C. ASSOCIATION PAGANERI. பாகனேரி

தென்னிந்திய
சைவசித்தாந்த சங்கம்
திருநெல்வேலி.
நவம்பர், 1943.

Koviloor Digital Library

Koviloor Digital Library

உ
சிவமயம்.

சைவ சமய விரதாதி விளக்கக்கொத்து.

பதிப்புரை.

விரதமாவது உணவை முற்று நீக்கியேனும், ஒரு நேரம் உண்டு மற்றை நேரங்களில் பால் நீர் முதலியன பருகிச் சுருக்கியேனும் மனத்தைப் பொறிவழி போகாது நிறுத்தி, மடியின்றிக் கடவுளை இடையறாது சிந்தித்து வாழ்த்தி வணங்கலாகும். பேருணவு மடிமைக்கும் தீ நெறிக்கும் ஏதுவாகலின் இறைவன் திருவடியில் மனத்தைப் பதிப்பதற்கு விரதம் இன்றியமையாததாகும்.

சைவ விரதங்கள் விநாயக விரதம், சுப்பிரமணிய விரதம், சிவ விரதம், தேவி விரதம் என நான்கு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இவற்றின் பகுதியா யடங்கும் பலவிரதங்களையும் இந்நூல் வகுத்துக் கூறுகிறது.

சிவராத்திரி விரதம், பிரதோஷ விரதம் முதலிய விரதங்களின் காரணங்களையும், காலங்களையும் அனுட் டிக்கும் முறைகளையும் சிவாகமங்களிற் கூறியபடி இந்நூல் விளங்க உணர்த்துகிறது.

பிரதோஷம், கார்த்திகை தீபமாகிய சுட்கப்பனை (சொக்கப்பனை) தீபாவலி இவற்றின் பொருள் இந் நூலின்கண் விளக்கப்பட்டுள்ளது.

Koviloor Digital Library

இந்நூல் தெப்போற்சவ விளக்கத்தைத் தெரிவிப்பதுடன் ஒவ்வொரு மஹோற்சவத்திலும் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழிலும் அடங்கியிருத்தலையும் வகுத்துக் காட்டுகின்றது.

விரதங்களின் முடிவில் சிவனடியார்களுடனிருந்து பாரணஞ் செய்யவெண்டுமென்று வலியுறுத்திக்கூறுதலின் விரதங்களிற் செய்யப்படும் தானங்களை ஏற்றற்குரியவர் சிவதீக்கை பெற்ற அந்தணரேயாவர். பிராமணர்களென்று இந்நூலுட் கூறப்பட்டுள்ளார் அவரே.

இது வித்துவான் காஞ்சிபுரம் சபாபதி முதலியாரவர்களால் அச்சிட்ட பிரதிக்கிணங்க அச்சிடப்பெற்றதாகும்.

இதனைக் கண்ணுறும் அன்பர்கள் இதிற் பொருட் பிழைகளோ அல்லது வேறுபாடுகளோ கண்டு காரணத்துடன் தெரிவிப்பார்களாயின் நன்றியறிதலுடன் ஏற்று அடுத்த பதிப்பில் திருத்திக்கொள்ளுகிறோம்.

சைவசித்தாந்த சங்கத்தார்.

Koviloor Digital Library

Koviloor Digital Library

பிழை திருத்தம்.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
2	21	முதலானதுகள்	முதலானவைகள்
3	2	செய்யப்பட்டதுகளை	செய்யப்பட்டவைகளை
3	4	இப்படி பூசை	இப்படிப் பூசை
3	10	இதுகளில்	இவைகளில்
4	6	பக்ஷச்	பக்ஷ
4	11	மாதச்	மாத
6	12	செய்வதில்லாதவர்கள்	செய்யாதவர்கள்
6	15	செய்வித்து	செய்வித்துத்
8	6	பரமசிவத்துக்கு	பரமசிவனுக்கு
9	5	பரமசிவத்தை	பரமசிவனை
9	7	பெறவுங்	பெறக்
9	8	மென்று	மென்றுங்
11	25	பரமேஸ்வரந்	பரமேஸ்வரன்
22	7	உற்பலம்	உற்பவம்
23	18	பரமேச்சுரத்தை	பரமேஸ்வரரை
24	12	பரமேச்சுரமானது	பரமேஸ்வரர்
24	13	பரமேச்சுரத்தின்	பரமேஸ்வரரின்
24	14	கறுத்தபடியால்	கறுத்தபடியால் அவருக்கு
24	14	பரமேச்சுரம்	பரமேஸ்வரன்
27	1	பரமசிவமானது	பரமசிவன்
27	4	பரமசிவத்தை	பரமசிவனை
27	15	மற்றுநாள்	மற்றை நாள்
29	11	கட்டளையிட்டது	கட்டளையிட்டார்
32	2	பரமசிவத்தைக்	பரமசிவனை
35	23	மாணிக்கவாசகமூர்த்தி களுக்காவது	மாணிக்கவாசகமூர்த்தி களுக்கு
37	20	மற்றுநாள்	மற்றை நாள்
37	26	புலிகளானது	புலிகளானவை

குறிப்பு:— இந்நூலுள் 'முதலானது' என்று வரும் பிற இடங்களிலெல்லாம் 'முதலானவைகள்' என்று திருத்திக்கொள்க.

Koviloor Digital Library

உ
சிவமயம்.

சைவசமய விரதாதி விளக்கக் கொத்து.

1. விநாயகர் விரதம்.

சுக்கிரவாரம் - சதுர்த்தி திதி-இவைகளுமல்லாமல், மார்கழி பாதச் சஷ்டி என மூன்று பிரிவு. சுக்கிரவார விரதம் அநுஷ்டிக்கு முறைமை.

சித்திரை மாதப் பூர்வபக்ஷ வெள்ளிக்கிழமை உதய காலத்தில் நதியில் ஸ்நானஞ்செய்து நித்தியானுஷ்டானங்களை நிறைவேற்றிக்கொண்டு கிரமப்படி மண்டபாலங்காரஞ் செய்து தண்டூலம்* பரப்பிப் பொற்கும்பம் வைத்து அதன் மேல் பொன்னினுலாவது வெள்ளியினுலாவது செய்வித்த விநாயக பிம்பம் வைத்துப் பூசித்து, பழங்கள்-எள்பொரி-கடலை-மொச்சை-கரும்பு-தேங்காய்-விளாம்பழம்- சர்க்கரை இவைகள் நிவேதனஞ்செய்து தொழுது தோத்திரித்து சிவன் ராத்திரி சிவாலயத்திற் சென்று நூறுபிரதக்ஷணம் பண்ணித் துதித்து வீட்டில் வந்து பலாதியுண்டு பொழுது விடிந்த பின்பு முன் வைத்த கும்பபிம்பங்களைப் பிராமணர்களுக்குக் கொடுத்துவிட்டுச் சிவனடியார்களுடனிருந்து *பாரணஞ் செய்யவேண்டும்.

விநாயக சதுர்த்தி, சங்கட சதுர்த்தி, அங்காரக சதுர்த்தி என மூன்று வகை.

---

* தண்டூலம்—அரிசி. * பாரணம்—சோறுண்டல்.

Koviloor Digital Library

மாசிமாதப் பூர்வபக்ஷச் சதுர்த்தி திதியில் பூ மாலைகளாலும், ரத்தினங்களாலும், மண்டபம் அலங்கரித்துத் திருமஞ்சன முதலாகிய அபிஷேக திரவியங்கள் சேகரித்துக் கொண்டு, பரிசுத்தமான இடத்தில் மிர்த்திகையெடுத்து அதில் வேர்கள் செல்லு முதலாகிய செந்துக்கள்-கல்லுகள் இக்குற்றங்களில்லாமற் பார்த்து அதனைப் பிசைந்து (சிற்ப சாஸ்திரத்திற் சொல்லுகிற முறைப்படி) விநாயக மூர்த்தியின் திருவுருவஞ் சமைக்கவேண்டும்.

இதுவுமல்லாமல், பொன்னினால் ஒரு விநாயக மூர்த்தி திருவுருவமைத்து அதன் பின்பு, மேற்சொல்லிய மண்டபத்தில் தண்டூலம் பரப்பி அதில் பொற்கும்பம் வைத்து; ஐந்து-ஆறு-எட்டு-பத்து-பன்னிரண்டு, எழுத்து மந்திரங்கள்-லக்ஷம்-செபிக்கவேண்டும், அல்லது பதினாயிரமாவது செபிக்கவேண்டும், இருபத்தெட்டு எழுத்து மந்திரம் பதினாயிரஞ் செபிக்கவேண்டும்.

இப்படி செபிக்கும்போது பத்துச் செபமானவுடன் ஒரு தருப்பணஞ் செய்யவேண்டும், அப்படி பத்துத் தருப்பணம் ஆனால் ஒரு ஓமஞ் செய்யவேண்டும், அப்படி பத்து ஓமஞ் செய்தானவுடனே ஒரு பிராமண போஜனஞ் செய்விக்கவேண்டும். இந்தக் கிரமமாகப் பூசை செய்து நிறைவேறுங் காலத்தில், பொன்-பூமி முதலானதுகள் தானங் கொடுக்கவேண்டும்.

மாசிமாதச் சுக்கிலபக்ஷச் சதுர்த்தி முதல் பங்குனி மாதச் சுக்கிலபக்ஷ சதுர்த்தி வரையில் நாள்தோறும் மேற்சொல்லிய முறைமைப்படி பூசை செய்து மிர்த்திகையினால் செய்யப்பட்ட விநாயக மூர்த்தியை விபவத்துடன் எழுந்தருளப் பண்ணிக்கொண்டுபோய் மடுவிலாவது தடாகத்

Koviloor Digital Library

திலாவது நதியிலாவது விட்டுவிடவேண்டும், பொன் முதலானதுகளால் செய்யப்பட்டதுகளை ஆசாரியருக்குத் தானமாகக்கொடுக்கவேண்டும்.

இப்படி பூசைசெய்ய முப்பது நாளும் பூசைசெய்கிறவர்கள் ஆகார நித்திரையில்லாமல் சத்தாதி விஷயங்களை நிக்கிரகித்து முப்பத்தொன்றுநாள் சிவனடியார்கள்-விருந்தாளிகள்-பந்துக்கள் இவர்கள் முதலானவர்களுடனிருந்து போசனஞ் செய்யவேண்டும்.

முப்பது நாளும் ஆகாரமில்லாதிருக்கமாட்டாதவர்கள், அவிசு-பழம்-பால் இதுகளில் ஒன்றைப் புசித்துக்கொண்டு விரதம் அனுஷ்டிக்கலாம்.

முப்பது நாள் அனுஷ்டிக்க மாட்டாதவர்கள் ஆரம்பித்த ஒரு நாள் மாத்திரமாவது, மேற்சொன்ன முறைமைப்படி விரதம் அனுஷ்டிக்கவேண்டும்.

(உ) சங்கடசதுர்த்தி விரதம்.

மாசிமீ அபரபக்ஷம் செவ்வாய்க்கிழமை கூடிய தினத்தில் வருகிற சதுர்த்தி சங்கடசதுர்த்தியாம்.

விரதம் அனுஷ்டிக்கவேண்டிய கிரமம்,

அன்று உதயகாலத்துக்கு முன் எழுந்து நித்தியானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு விபூதி ருத்திராக்ஷதாரணராய்க் காமமுதலாகிய குற்றங்களை ஒழித்து விநாயகமூர்த்தியின் திருவடிகளை மனதிலே தியானித்து, ஏகாக்ஷரம்-சடாக்ஷரம்-நாமமந்திரம் என்னும் மூன்று மந்திரத்தில்; ஒரு மந்திரத்தைச் செபித்துக்கொண்டு அன்று முழுவதும் உபவாசித்து இராத்திரி சந்திரோதயமாகிறபோது விநாயக மூர்த்தியை ஆசனத்தில் எழுந்தருளப்பண்ணி

Koviloor Digital Library

மிகுந்த அன்புடன் திருமஞ்சன முதலாகிய பொருள்களால் பூசனை செய்து துதித்து அதன் பின்பு பிராமண போசனஞ் செய்வித்து அவ்விராத்திரி முழுதும் நித்திரை செய்யாமல் விநாயக மூர்த்தியின் சரித்திரங்களைக் கேட்டுக்கொண் டிருப்பதுவே சங்கடசதுர்த்தி விரதம் அநுஷ்டிக்கிற கிரமமாகும்.

(ங) அங்காரகசதுர்த்தியாவது.

கிருஷ்ண பக்ஷச் செவ்வாய்க்கிழமையில் வருகிற சதுர்த்தியாம், இத்தினத்தில் சந்திரோதயமான பின்பு விநாயக பூசை செய்யவேண்டும். செவ்வாயென்னுங்கிரகம் பூசித்தமையால் அங்காரகசதுர்த்தியென்று சொல்லப்பட்டது; செவ்வாய்க்கு அங்காரகன் என்றும் பெயர். மார்கழி மாதச் சஷ்டி திதியிலும் இந்தக் கிரமமாக விரதம் அநுஷ்டித்தால் விநாயகர் கிருபை கூர்ந்து வேண்டிய வரங்களை அருள் செய்வார்.

விநாயகர்விரதம் முற்றிற்று.

---

2. சுப்பிரமணியசுவாமி விரதம்.

ஐப்பசிமீ பூர்வ பக்ஷ வெள்ளிக்கிழமை சஷ்டி திதி, கார்த்திகை மாதக் கார்த்திகை நக்ஷத்திரம் என்னும் இத் தினங்களில் அநுஷ்டிக்கவேண்டும்.

ஐப்பசி மாத வெள்ளிக்கிழமை யுதய காலத்தில் ஸ்நானஞ்செய்து சுப்பிரமணிய சுவாமியைத் தியானஞ் செய்து நித்யாநுஷ்டானங்களை முடித்துக்கொண்டு நெல்

Koviloor Digital Library

பரப்பி அதன்மேல் கும்பம் வைத்து மாவிலை சொருகி அதில் பொன்னினுற் செய்யப்பட்ட சுப்பிரமணியர் திருவுருவத்தை வைத்து வேத விதிப்படி பூசை செய்து அன்றி ராத்திரி ஆலயத்திற்சென்று சுவாமியை தரிசித்துப் பண்டு பலாதிகளுண்டு மறுநாள் பொழுது விடிந்தபின் ஸ்நான முதலானதுகள் செய்து சுவாமியைப் பூசித்துக் கும்பத்தையும், பொன்னினுற் செய்யப்பட்ட பிம்பத்தையும், பிராமணருக்குக் கொடுத்துப் போசனஞ் செய்வித்துப் பின்பு ஒன்பது நாழிகைக்குள் சிவனடியார்களுடன் பாரணஞ் செய்யவேண்டும்.

நக்ஷத்திர விரதம்.

சித்திரை மாத முதல் பன்னிரண்டு மாதத்திலும் வருகிற கார்த்திகை நக்ஷத்திரத்திலும் இவ்வாறே விரதம் அனுஷ்டிக்கவேண்டும், பன்னிரண்டு மாதத்திலும் வருகிற இருபத்துநாலு சஷ்டியிலும் அவ்வாறே விரதம் அனுஷ்டிக்க வேண்டும்.

இந்த விரதங்கள் அனுஷ்டித்துத் தேவர் முதலானவர்கள் வேண்டிய வரங்கள் பெற்றுக்கொண்டார்கள்.

சுப்பிரமணியசுவாமி விரதம் முற்றிற்று.

---

3. சிவ விரதம்.

(க) சோமவார விரதம் (உ) திருவாதிரை விரதம் (ங) உமாமகேசுவர விரதம் (ச) சிவராத்திரி விரதம் (ரு) கேதாரேசுவர விரதம் (சு) மாமண விரதம் (எ) ரிஷப வாகன விரதம் (அ) சூலாயுத விரதம் என எட்டுவகை.

Koviloor Digital Library

(க) சோமவார விரதம்.

கார்த்திகை மாதம் முதற் சோமவாரந்தொடங்கி அனுஷ்டிக்கவேண்டும். அனுஷ்டிக்கு முறைமை உதய காலத்திலெழுந்து ஸ்நான முதலான நித்திய கர்மங்களை முடித்து அதற்குமேல் ஆத்துமார்த்த பூசையுஞ் செய்து, பின்பு ஒரு பிராமணனை அவன் பத்தினியுடன் வருவித்து, அவ்விருவரையும் சிவமும் பராசத்தியுமாகப் பாவனை செய்து பூசித்து அமுதுபடி முதலானவைகள் தன் செல்வத்துக்குத் தகுதியாகக் கொடுத்தனுப்பித் தாளொருபொழுதுபோசனஞ் செய்யவேண்டும், அன்று பகல் முழுவதுஞ் சிவத்தியானம் பண்ணிக்கொண்டிருந்து இராத்திரி போசனங்கொண்டால் மிகவும் உத்தமம்.

சிவபூசை செய்வதில்லாதவர்கள் மேற்சொல்லிய படி பிராமண பூசையுஞ்செய்து சிவாலயத்திற் சென்று பரமசிவனுக்கு அபிஷேக முதலான சோடசோபசாரத் துடன் வில்வார்ச்சனையுஞ் செய்வித்து துதித்துப் பிராமண போசனமுஞ் செய்வித்து அன்று உபவாசமாயிருந்தாலும் அல்லது பகற்பொழுது மட்டும் உபவாசமாயிருந்தாலும் உத்தமமே. இவ்வாறு சோமவாரவிரதம் அனுஷ்டிப்பவர் களுக்குச் சாலோகாதிபலன் கிடைக்கும்.

(உ) திருவாதிரை நக்ஷத்திர விரதம்.

மார்கழி மாதத் திருவாதிரை நக்ஷத்திரத் தினத்தின் உதயத்தில் நித்திரை நீக்கிச் சிவத்தியானத்துடன் சென்று புண்ணிய தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து விபூதி ருத்திராக்ஷந் தரித்துக்கொண்டு ஆலயத்துட்போய்ப் பிரதக்ஷணஞ்செய்து பரமசிவனை வணங்கித் துதித்துப் பசு நெய்யால் தீபங்க

Koviloor Digital Library

வேற்றித் திருமஞ்சன முதலான உபசாரங்கள் நடப்பித்து, இவ்வாறு நடேசமூர்த்திக்கும் நடப்பித்துத்துதித்து அன்று முழுவதும் உபவாசமாய்ச் சிவசரிதங்கேட்டுக் கொண்டிருந்து பொழுது விடிந்த பின்பு நித்தியகருமங்களை நிறைவேற்றிக்கொண்டு சிவதரிசனஞ்செய்து பிராமண சந்தர்ப்பனை நடப்பித்துச் சிவனடியார்களை வைத்துக்கொண்டு பாரணஞ்செய்யவேண்டும். இந்த விரதம் சிதம்பரத்தில் நடப்பித்தால் பலன் ஒன்று கோடியாம்.

(௩) உமாமகேசுவர விரதம்.

கார்த்திகை மாதப் பர்வதினத்தில் மேற்சொல்லிய படி ஸ்நான முதலிய நித்திய கர்மங்களை முடித்துப் பொன்னினால் உமாமகேசுவரத்திருவுருவஞ் செய்வித்துக்கொண்டு நல்ல ஓரிடத்தைச் சாணத்தினால் சுத்திசெய்து அவ்விடத்தில் பத்துப்படி நெல் பரப்பி அதன்மேல் கும்பம் வைத்து நீர் நிறைத்து மாவிலை வைத்து ஒரு வஸ்திரத்தை நாலாக மடித்துக் கும்பத்தின்மேல் மாவிலைக்கு நடுவாகவிருக்கும் படி வைத்து பொன்னினாற் செய்வித்திருக்கிற பிரதிமையை பஞ்சகவ்வியத்தினாற் சுத்திசெய்து தூபங்கொடுத்துக் கும்பத்தின்மேல் வைத்துச் சந்தனபுட்பங்கள் திருமுடியிற் சாத்தி அன்புடன் பூசித்து நிவேதனமுஞ்செய்வித்து மூன்று பிரதக்ஷணஞ்செய்து சாஷ்டாங்கமாக நமஸ்கரித்துத் தோத்திரஞ்செய்து சிவாலயத்துக்குப்போய் அங்கும் உமாமகேசுவரர்களுக்குத் திருமஞ்சன முதலானவை அன்புடனிறைவேற்றி வீட்டில்வந்து ஒருகால் போசனங்கொண்டு இராத்திரி ஏதாவதொரு பண்டமுண்டு பொழுதுவிடிந்த பின்பு முன்போல் நித்திய கர்மானுஷ்டானங்களை முடித்துக் கொண்டு முன்பு வைத்த உமாமகேசுவரர்களைப் பூசித்து அந்தப்பிரதிமைகளைப் பிராமணர்களுக்குக் கொடுத்துவிட்டு சிவனடியார்களுடன் பாரணங்கொள்ளவேண்டும்.

Koviloor Digital Library

(௪) சிவராத்திரி விரதம்.

மாசி மாதம் அபரபக்ஷச் சதுர்த்தசி திதியில் சூரியோதய காலத்தில் நித்திய கர்மானுஷ்டானங்கள் முடித்துச் சிவத்தியானத்துடன் அன்று பகல் முழுவதும் உபவாசமாயிருந்து இராத்திரி நான்கு சாமத்திலும் நித்திரையில்லாமல் சிவபூசை செய்யவேண்டும். சிவபூசை யில்லாதவர்கள் ஆலயத்திற்சென்று பரமசிவத்துக்கு அபிஷேக முதலானது கள் செய்வித்து தரிசனம் பண்ணி மறுநாள் உதயமானவுடன் நித்திய கர்மானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு சிவதரிசனஞ்செய்துவந்து பாரணஞ்செய்யவேண்டுவது,— சிவராத்திரி தினம் ராத்திரி பதினுலு நாழிகைக்குமேல் ஒரு முகூர்த்தம் லிங்கோற்பவகாலம் என விதிக்கப்பட்டிருப்பதினுல் அந்தக்காலத்தில் அவசியம் சிவதரிசனஞ் செய்ய வேண்டும்.

சித்திரை மாதம் முதல் பன்னிரண்டு மாதங்களும் வருகிற சதுர்த்தசி இருபத்து நான்கு தினமும் நித்திய சிவராத்திரி,—அபரபக்ஷச் சதுர்த்தசி பன்னிரண்டும் மாத சிவராத்திரி, எந்த மாதத்திலாவது சோமவாரமும்—அமாவாசையுங் கூடுமானல்-அது யோகசிவராத்திரி,—தை மாதம் அபரபக்ஷப் பிரதமை முதல் பதின்மூன்று நாளும் ஒரு காலபோசனமாக விரதம் அனுஷ்டித்துக்கொண்டிருந்து பதினலா நாளாகிய சதுர்த்தசி திதியில் மேற்சொல்லிய விதிப்படி விரதம் அனுஷ்டிப்பது பக்ஷ சிவராத்திரி,—மாசி மாத அபரபக்ஷ சதுர்த்தசி-மகாசிவராத்திரி,— இவ்வாறு சிவராத்திரி ஐந்து வகையாம்என்று (உபதேச காண்டத்திற்) சொல்லப்படுகின்றது.

Koviloor Digital Library

பிரமதேவனுக்கு இறுதிக்காலமாகிய பிரளயத்தில் சீவராசிகள் முழுவதும் ஒழிந்துபோன இராத்திரிகால நான்கு சாமத்திலும் பார்வதி தேவியார் பரமசிவனைப் பூசித்து மறுபடி சிருஷ்டி தொடங்குங் காலத்தில் பார்வதி தேவியார் பரமசிவத்தை நோக்கி நான் தேவரீரைப் பூசித்தமையா லிதற்குச் சிவராத்திரி யென்றும், இந்தக் காலத்தில் விரதமிருந்து பூசிப்பவர்கள் சாயுச்சியம் பெறவுங் கிருபை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். இதை (உபதேச காண்டத்திற்) கண்டுகொள்க.

(ரு) கேதாரேஸ்வர விரதம்.

சிந்தியம் என்னும் (ஆகமத்தில்) விதித்திருக்கின்றது. இவ்விரதம் நான்கு பக்ஷமாகப் பண்ணவேண்டுவது

அஃது .... உத்தமம் 1

புரட்டாசிமீ - பூருவபக்ஷம் - அஷ்டமி முதல்-அபரபக்ஷம்-சதுர்த்தசி வரைக்கும்-நாள்-உக .... மத்திமம் 2

ஷை மீ-அபரபக்ஷம்-பிரதமை முதல் சதுர்த்தசி வரைக்கும் நாள் யச .... அதமம் 3

ஷை மீ-அபரபக்ஷ-அஷ்டமி முதல் சதுர்த்தசி வரைக்கும்-நாள் எ .... அதமா அதமம் 4

ஷைமீ-அபரபக்ஷம்-சதுர்த்தசி-நாள் க....சாமானியபக்ஷம் 5

ஐப்பசிமீ - அபரபக்ஷம் - சதுர்த்தசி திதியில் நடத்துவது .... கேவலபக்ஷம் 6 பரியாயம்.

இவ்விரதம்,—கிரமமாய் இருபத்தொருநாள் பண்ணுகிறதானல், நாள் ஒன்றுக்கு பூமந்திர முதலானதுகளை ஒவ்வொன்ருகப் பூசித்து இருபத்தொன்ரு நாளில் தோரந் தரித்துக்கொள்ளவேண்டியது.

Koviloor Digital Library

பதினன்கு தினம் பண்ணுகிறதானல் நாள் ௰௩-க்கு நாள்-ஒன்றுக்கு-மந்திர முதலானதுகள் ஒவ்வொன்று மற்ற ஒருநாளில் மந்திர முதலானதுகளை எட்டுமாகப் பூசித்துப் பதினலாவது நாளில் தோரந்தரித்துக்கொள்ளவேண்டியது.

எழுநாள் பண்ணுகிறதானல் நாள் ஒன்றுக்கு மந்திர முதலானதுகளை மூன்று விழுக்காடு பூசித்து, எழாநாள் தோரந்தரித்துக்கொள்ளவேண்டியது.

ஒரு தினத்தில் பண்ணுகிறதானல் மந்திர முதலானதுகளை அன்றைய தினமே - உக-ம் பூசித்துத் தோரந் தரித்துக்கொள்ளவேண்டியது.

இதன் பலன்,—தருமார்த்தகாமிய மோக்ஷத்தைத் தருகின்றது.

* தோரவகை.

உத்தமம்	....	ரத்தினமணி .... உக
மத்திமம்	....	பொன்மணி .... உக
அதமம்	....	வெள்ளிமணி.... உக
அதமாஅதமம்	....	வெண்பட்டிழை....உக

இந்த மணிகளையும் இழைகளையுங் கோத்தும் முடிந்தும் முடிவு தினத்தில் வலது அஸ்தத்தில் தரித்துக்கொள்ளவேண்டியது.

வெண்பட்டிழை அளவு பிரமாணப்-விரதக் கர்த்தாவினுடைய கையளவுகொண்ட ஒரு சுத்திற்கு இசைந்தபடி வைத்துக்கொள்ளவேண்டியது.

ஷை மந்திர முதலானதுகளை மேற்படி மணிகளுக்காவது இழைகளுக்காவது ஆவாகனம் பண்ணிப் பூசித்துக் கொள்ளவேண்டியது.

---

* தோரம் — மணிச்சரம்.

Koviloor Digital Library

இவ்விரதம்-ஆவணிமீ த்தில் ஆரம்பித்துப் புரட்டாசி மாதத்தில் முடிவு செய்கிறதாயிருந்தால் - ஐப்பசிமீ த்தில் சாமானிய பக்ஷத்தில்-விரதநேரிடமாட்டாது. அப்படி யில் லாததால் ஒருகாலத்தில் இந்நான்கு பக்ஷத்தில் உத்தம பக்ஷமாய் நடத்தவேண்டிய பேர்களுக்கு ஐப்பசிமீ த்தில் நேரிடும் ஆதலால்-ஐப்பசி மாதம் ஒப்புக்கொள்ளப்பட்டதே யல்லாமல் ஐப்பசி மாதத்தில் பண்ணச் சொல்லிக் கேவலம் விதியுண்டாகவில்லை.

பரமேஸ்வருக்குக் கேதாரேஸ்வரரென்று நாம தேயம் வந்தவரலாறும் தேவியார் தபசுபண்ணிய வரலாறும் பிருங்கிமகா இருடியின் வரலாறும் விரதம்பண்ணவேண் டிய கிரமங்களும் (பவுஷியோத்தர புராணத்திற்) கண்டு கொள்ளவேண்டியது.

கேதாரேஸ்வர விரதம் பண்ணவேண்டியதற்குக் காரணம் சிந்தியம் என்கிற (ஆகமத்தில்) விதித்திருக்கின்றது.

கையிலாசத்தில் பரமேஸ்வரரும் - பரமேஸ்வரியும் - எழுந்தருளியிருக்கும்போது, தேவரிஷியாகிய பிருங்கிமகா இருடியானவர் பரமேஸ்வரத்தைத் தரிசனம் தியானம் தோத் திரம் பண்ணிப் பரமேஸ்வரியை நீக்கிப் பரமேஸ்வரத்தை மாத்திரம் பிரதக்ஷண நமஸ்காரம் பண்ணினர். அதைக் கண்ட பரமேஸ்வரியானவர் பரமேஸ்வரத்தை நோக்கி சுவாமி இந்த ரிஷியானவர் என்னை நீக்கி உம்மை மாத்திரம் பிரதக்ஷண நமஸ்காரம் பண்ணின காரணமென்னவென்று கேட்க அந்த ரிஷியானவர் முமுட்சுவும் நிஷ்காமியருமான தாலும் நீ மோக்ஷத்ததிகாரியல்லவானதாலும்-நம்மை மாத் திரம் பிரதக்ஷண நமஸ்காரம் பண்ணினரென்று பரமேஸ்வரந்

Koviloor Digital Library

திருவுளம்பற்ற இதனைக் கேள்வியுற்ற பரமேஸ்வரியானவர் கோபித்து இந்த ரிஷியினுடைய ரத்தமாமிசங்கள் நம்மிட சத்தியானதால் அல்லவா பிரதக்ஷண நமஸ்காரம் பண்ணினு ரென்று தேவியார் திருவுளம் பற்றினதைக் கேள்வியுற்ற ரிஷியானவர் உடனே தம்முடைய தேகத்திலுள்ள ரத்த மாமிசங்களை உதறிவிட்டுத் தோலும் என்புமாய்ச் சன்னி தானத்தில் நின்றனர். அதைக்கண்ட பரமேஸ்வரர் உடனே கிருபை கூர்ந்து ஷை ரிஷிக்கு நடுக்காலொன்று தந்து ஜீவ சம்ரக்ஷணையின் பொருட்டு-அஸ்த மஸ்தக - சையோகமுஞ் செய்தருளினர் - இதனைக்கண்ட பரமேஸ்வரியானவர் உடனே-கௌதமர் ஆசிரமத்துக்கு எழுந்தருளிப் பரமேஸ் வரர் தமக்கு நடப்பித்த அவமரியாதிகளைக் கௌதம ரிஷி யுடனே திருவுளம்பற்ற ஷை ரிஷியானவர்-பூர்வதியானஞ் செய்து தாயே பரமேஸ்வரஞ் செய்த காரியஞ் சரியே தேவரீர் தபசு செய்து பரமேஸ்வரத்தினிடத்தில் அர்த்த நாரீஸ்வரம் பெற்றுக்கொண்டால் இப்படி நேரிடமாட்டாது என்று விண்ணப்பம் பண்ணிக்கொள்ளப் பரமேஸ்வரி யானவர்-பத்ரிகேதாரம் என்னும் மகாஸ்தலத்தில் எழுந் தருளி இருபத்தொரு நாள் தபசு பண்ணிப் பரமேஸ்வரத் தினிடத்தில் அர்த்த நாரீஸ்வரம் பெற்றுக்கொண்டார்.

இவ்விரதம் ஆலயங்களிலும் இருபத்தொருநாள் தேவி விரதவுற்சவம் என நடத்தும்படி (ஆகமத்தில்) விதித் திருக்கின்றது.

ரிஷிகள் கிரமம்.

தேவரிஷி - அசுரரிஷி - நரரிஷி இம் மூவகைகளில், பிருங்கியானவர் - தேவமஹா ரிஷி யென்றறிக.

Koviloor Digital Library

(சு) மாமனா விரதம்.

பங்குனிமீ உத்திர நக்ஷத்திர தினத்தில் உதயகாலத்தில் எழுந்து பரமசிவனையும் பார்வதிதேவியாரையும் திருமணக்கோலமாகச் சிந்தனைசெய்து ஸ்நான முதலிய நித்திய கடன்களை முடித்துச் சுவாமியையும் தேவியாரையும் சுவர்ணத்தினால் மணவாளக்கோலமாகத் திருவுருவமைத்து ஓர் இடத்தைச்சுத்திசெய்து மேற்சொல்லியதுபோல் நெல்பரப்பி அதன்மேல் குடம் வைத்து நீர் நிறைத்து மாந்தழையிட்டுப் பொன்னினால் அமைக்கப்பட்ட திருவுருவங்களைப் பஞ்சகவ்வியத்தினால் சுத்தி செய்து கும்பத்தின்மேல் வைத்துச் சோடசோபசாரத்துடன் பூசைசெய்து தம்பதி சமேதராகப் பிராமணனை அவன் பத்தினியுடன் வருவித்துச் சிவமுஞ் சத்தியுமாகப் பாவித்துப் பூசை செய்து அவர்களுக்கு வஸ்திராபரண முதலானவைகள் கொடுத்துப் போசனஞ் செய்வித்துப் பின்பு ஆலயத்துக்குப்போய்ப் பிரதக்ஷணஞ் செய்து சோடசோபசாரத்துடன் ஆராதனை செய்வித்துத் தொழுது தோத்திரஞ்செய்து மனையிடத்து வந்து அஸ்தமனமானவுடன் அப்போது நடக்கத்தக்க நியதிகளை நடத்திக் கொண்டு சிவனடியார் மனைவி மக்கள் முதலான பந்துக்களுடன் போசனஞ்செய்து தருப்பை பரப்பி அதன்மீது படுத்து நித்திரை செய்து விடியற்காலம் நித்திரை நீங்கி நித்திய கடன்களை முடித்துப் பூசித்துத் திருமணக்கோலப் பிம்பங்களைப் பிராமணருக்குக் கொடுத்துச் சிவனடியார்களுடன் அமுது கொள்ளவேண்டுவது; இந்த விரதம் அநுஷ்டித்தால் வேண்டிய வரங்கள் சித்தியாகும்.

(எ) சூலாயுத விரதம்.

உத்தராயண புண்ணிய காலமாகிய மகாசங்கிராந்தி தினத்தில் முன்சொன்னபடி நித்தியாநுஷ்டானங்களை

Koviloor Digital Library

முடித்துப் பார்வதி பரமேஸ்வரர்களைப் பொன் அல்லது வெள்ளியினால் திருவுருவமைத்துச் சூலாயுதமுஞ் செய்து சுவாமிதிருக்கரத்தில் சாத்தி மேற்சொன்னபடி பூசிப்பதாம்.

(அ) ரிஷபவாகனருடர் விரதம்.

வைகாசி மாசப் பூர்வபக்ஷ அஷ்டமி திதியில் மேற்சொன்னபடி பொன்னினால்-பார்வதி பரமேசுவரர்களை ரிஷபவாகனமும் அமைத்து அதன்மேல் எழுந்தருளப் பண்ணி முன்சொன்னபடி கும்பத்தின்மேல் வைத்துப் பூசித்து அன்று முழுவதும் ஆகார நித்திரையில்லாமல் சிவ சரிதங் கேட்டுக்கொண்டிருந்து உதயகாலமான பின்பு முன்போல நித்திய நியமங்கள் முடித்துக்கொண்டு பாரணஞ் செய்யவேண்டும்.

4. பார்வதி தேவியார் விரதம்.

சுக்கிரவாரம், ஐப்பசிமீ-உத்தர நட்சத்திரம், நவ ராத்திரி இத்தினங்களில் அநுஷ்டிக்கவேண்டுவது.

(க) சுக்கிரவார விரதம்.

சித்திரை மாதப் பூர்வபக்ஷப் பிரதமையுடன் சுக்கிர வாரமுஞ் சேர்ந்த தினத்தில் ஆரம்பித்து சுக்கிரவாரந் தோறும் மேற்சொல்லிய விதிப்படி அநுஷ்டிக்கவேண்டும். இந்த விரதத்தைச் சுக்கிரபகவான் முதலில் அநுஷ்டித்துப் பேறுபெற்றபோது அந்தத் தினத்துக்குச் சுக்கிரவாரம் என்று பேர்வழங்கும்படியாயும் பார்வதி தேவியாரிடத்தில் வரம் பெற்றுக்கொண்டான். இந்த விரதம் அநுஷ்டிக்கும் பூசையில் பார்வதி தேவியாருக்குச் சருக்கரை நிவேதிக்க வேண்டும்.

Koviloor Digital Library

(உ) ஐப்பசிமீ உத்திரநக்ஷத்திர விரதம்.

ஐப்பசிமாத உத்திர நட்சத்திரத்தில் மேற் சொல்லிய விதிப்படி கும்பம் வைத்துப் பொன்னிறைற் செய்யப்பட்ட பார்வதி தேவியார் திருவுருவத்தை அக் கும்பத்தின்மேல் வைத்துப் பூசித்து தொழுது தோத்திரஞ் செய்யவேண்டும்.

(ங) நவராத்திரி விரதம்.

புரட்டாசி மாதப் பூர்வபட்சப் பிரதமை தொடங்கி எட்டுநாளும் மேற்சொல்லியபடி பூசித்துப் பழமுதலான வைகள் ஆகாரமாகப் புசிக்கவேண்டும். ஒன்பதாம் நாளாகிய நவமி தினத்திலும் அவ்வாறியற்றி மறுநாள் தசமி திதியில் பாரணங் கொள்ளவேண்டும்.

சிவராத்திரி

வாதுளம் - காமிகம் - காரணம் - லளிதை-கிரணம் - விஜயம் - சுப்பிரபேதம், தீப்தம் என்னும் இவ்வெட்டு ஆகமங்களிலும்;சாலோத்தரம், காலநிர்ணயம் என்னும் இவ்விரண்டு உபாகமங்களிலும், பவுஷியோத்திரம், காந்தம், வாயு என்னும் இம்மூன்று புராணங்களிலும் விதித்திருக்கின்றது.

சிவராத்திரியின் கால நிர்ணயம்.

மாசி மாதம் - கிருஷ்ணபட்சம் - சதுர்த்தசி ராத்திரி பதினான்கு நாழிகை லிங்கோற்பவ காலத்தில் மஹா சிவராத்திரி புண்ணியகாலம்.

கிருஷ்ணபட்சம்-திரயோதசி உதயாதி முப்பது நாழிகைக்குச் சதுர்த்தசி வியாபிப்பது உத்தமம். திரயோதசி ராத்திரி பதினொன்றேகால் நாழிகைக்குச் சதுர்த்தசி வியாபிப்பது மத்திமம். திரயோதசி உதயாதி இருபத்தொன்பது நாழிகைக்குச் சதுர்த்தசி வியாபிப்பது அதமம். சிவராத்திரி

Koviloor Digital Library

தினத்தில் திரயோதசி வியாபகமில்லாமல் சுத்த சதுர்த்தசி மாத்திரம் வியாபிப்பது அதமாதமம். ஒரு காலம் அன்றைய ராத்திரிக்கு அமாவாசை பிரவேசிப்பது பரியாய சிவராத்திரி என்றறிக. ஒருகாலம் மாசி மாத முதலிலுங் கடையிலுஞ் சிவராத்திரி புண்ணியகாலம் நேரிடுமானால் சதுர்த்தசி விருத்தியாயிருக்கிற தினத்தில் விரதம் முதலானதுகள் நடத்தவேண்டியது.

இந்த மஹா சிவராத்திரி தினத்தில் மகாவிஷ்ணு நக்ஷத்திரமாகிய திருவோண நக்ஷத்திரமுங் கூடுமானால் விசேஷ மஹாசிவராத்திரி என்றறிக.

இந்த மஹாசிவராத்திரி காலத்தில் நேரிடுகிற திரயோதசியானது பரசிவத்துக்குத் தேகமாகவும் சதுர்த்தசி தேகியாகவும் இருப்பதுமல்லாமல், திரயோதசி சத்தியாகவுஞ் சதுர்த்தசி சிவமாகவும் மேற்படி ஆகமங்களில் விதித்திருக்கின்றது.

சிவராத்திரிக்கு மற்றுநாள் சதுர்த்தசியில் பாரணை நடத்துவது உத்தமம். இதன் பயன் கோடியெக்கிய பலன் கைகூடுமென்பதாம். சதுர்த்தசி வியாபகமில்லாமற் பாரணம் நடத்துவது பரியாயம்.

சிவராத்திரியின் பூசா விதி.

அஃது

சிவராத்திரி தினத்தில் பரார்த்த பூசையாவது ஆத்துமார்த்த பூசையாவது தங்கள் தங்கள் நியமப்பிரகாரம் நடத்தவேண்டியது.

நைமித்திய விதி.

சிவராத்திரி முதற் சாமந்தொட்டுச் சாமந்தோறும் நான்கு சாமமும் பூசை நடத்தவேண்டியது.

Koviloor Digital Library

பரார்த்தத்துக்காவது, ஆத்துமார்த்தத்துக்காவது சூரிய தேவர் முதலான பரிவாரங்களுக்கும் சோமாஸ்கந்த மூர்த்தி முதலானவர்களுக்கும் பூசை நடத்தவேண்டிய தில்லை.

பரார்த்தத்துக்கு மஹாலிங்க முதலான மூலமூர்த்திகளுக்கும் ஆத்துமார்த்தத்துக்கு மகாலிங்க மூர்த்திக்கு மாத்திரம் நடத்தவேண்டியது.

பரார்த்தத்துக்குத் துவார பூசையும், நித்தியோத்சவ முதலானதுகளும் நடத்தவேண்டியதில்லை.

பரார்த்தத்துக்காவது ஆத்துமார்த்தத்துக்காவது மஹாகணபதிக்கு மாத்திரம் நான்கு காலத்திற்கும் பூசை நடத்தலாம்.

பரார்த்தத்துக்கு முதற்காலமாத்திரம் அஷ்டோத்திர சதகலச பூர்வமாக ஸ்தபனங்க அபிஷேகம் நடத்த வேண்டியது.

பரார்த்தத்துக்காவது ஆத்துமார்த்தத்துக்காவது அபிஷேக முதலானதுகள் நடத்தவேண்டிய விதி.

அஃது,

முதற்காலம்:— அபிஷேகம் - பஞ்சகௌவ்வியம் வஸ்திரம்-செம்பட்டு-பத்திரம்-வில்வம்-கந்தம் - பச்சைக்கர்ப்பூரம் சேர்த்த சந்தனம்-நிவேத்தியம்-பாற்பொங்கல்-தூபம் சாம்பிராணி-சந்தனக் கட்டை-தீபம்-புட்ப தீபம்.

இரண்டாங் காலம்:— அபிஷேகம்-பஞ்சாமிர்தம்-வஸ்திரம்-மஞ்சள் பட்டு-பத்திரம்-குருந்தை - கந்தம் - அகில் சந்தனம்-நிவேத்தியம்-பாயசான்னம் - தூபம் - குங்குமம்-சாம்பிராணி-தீபம்-நக்ஷத்திர தீபம்.

Koviloor Digital Library

மூன்ருங்காலம்:— அபிஷேகம் - பலோதகம்-வஸ்திரம்-வெண்பட்டு-பத்திரம்-கிளுவை-விளா-கந்தம் - கஸ்தூரி சேர்ந்தசந்தணம்-நிவேதனம்-எள்ளோதனம்-தூபம்-மேகம் கருங்குங்கிலியம்-தீபம்-ஐந்துமுக தீபம்.

நாலாங்காலம்:— அபிஷேகம் - கந்தோதகம் - வஸ்திரம்-நீலப்பட்டு-பத்திரம்-கருநொச்சி-கந்தம்-புனுகுசேர்த்த சந்தணம்-நிவேத்தியம் - சுத்தான்னம் - தூபம் - கர்ப்பூரம்-லவங்கம்-தீபம் -வில்வார்த்தி அல்லது மூன்றுமுக தீபம்.

இவ்வண்ணமாக நான்குகாலமும் பூசிக்கும் போதெல்லாம் சண்டேசர் பூசையும் நடத்தவேண்டியது.

மேலெழுதிய நான்குகால பூசைக்கும் விதித்திருக்கிற திரவியங்கள் சிவராத்திரி விசேஷ தினமானதால் இதுகளோடு யதாவிதியான அபிஷேக முதலானதுகளும் பத்திர புட்பங்களும் - சித்திரான்னங்களும் - அபூப வகைகளும்-சோடசோபசார தீபாராதனைகளும் நடத்தவேண்டியது.

இந்த நான்குகால பூசைகளும் - மஹாலிங்க மூர்த்திக்கு அஷ்டபுட்ப பூர்வமாக நடத்தவேண்டியது.

அஷ்டபுட்ப விதியை ஆசாரியர் மூலமாயுணரவேண்டியது.

அஷ்டபுட்பமென்பது அர்ச்சனைக்காகிய எண்வகை புட்பமும் அன்றியில் மந்திர பூர்வமாயுள்ளதென்றுமுணர்க.

பூசை நடத்தவேண்டிய முறைமை.

அஃது.

நான்கு காலத்திற்கும் காலகாலமும் பூசை நடத்துவது உத்தமம்.

Koviloor Digital Library

நான்கு காலத்திற்கும் ஒரு காலமாகச் சேர்த்து நடத்துவது மத்திமம்.

ஆத்துமார்த்த பூசை பண்ணுகிறவர்களுடைய அசக்த விஷயம் தன்னுடைய ஆசாரியரைக்கொண்டு நடத்துவது உத்தமம்.

அபிஷேக யுக்தாளைக்கொண்டு நடத்துவது மத்திமம்.
ஆத்தும பந்துக்களைக்கொண்டு நடத்துவது அதமம்.
சரீரபந்துக்களைக்கொண்டு நடத்துவது அதமாதமம்.
கூலி கொடுத்து நடத்துவது பரியாயம்.

ஆத்துமார்த்த பூசை பண்ணவேண்டியவர்களுக்கு ஸ்தானவிதி.

அஂது.

ஆலயப்-புண்ணிய ஸ்தலப்-நதிதீரம் - பர்வத தீரம்-புட்பவனம்-ஆசாரியர் வீடு-தன்வீடு இந்த ஸ்தானங்களில் எங்கேயாவது பண்ணலாம்.

சிவராத்திரி புண்ணிய காலத்திற் பண்ணவேண்டிய தானக்கிரமம்.

சிவலிங்கம்-ருத்திராக்ஷம்-விபூதிப்பை-நவரத்தினம்-பொன்-வெள்ளி-கோ-பூமி முதலான தானங்கள் பண்ணுவதும் அல்லாமல் மறுநாள் பிராமண சந்தர்ப்பணமும் மஹேஸ்வர பூசையும் நடத்தவேண்டியது.

தான காலம்.

நான்கு காலமாகவாவது - ஒரு காலமாகவாவது-பூசைபண்ணிச் சண்டேசர் பிரிதியானவுடனே மேற்படி தானங்களைப் பண்ணவேண்டியது.

Koviloor Digital Library

இந்த மஹாசிவராத்திரி விரதம்; கிருதயுகத்தில்-விநாயக மூர்த்தியும், திரேதயுகத்தில்-ஷண்முக மூர்த்தியும், துவாபரயுகத்தில்-பிரம்மதேவரும், கலியுகத்தில்-விஷ்ணு மூர்த்தியும் அநுஷ்டித்ததாக மேற்படி ஆகமங்களில் விதித்திருக்கின்றது.

இவ்விரதம் மூன்றுவகையாக அனுஷ்டிக்கவேண்டியது.

அஃது.

உபோஷியம் — ஜாகாப பூசை.

இந்த மகாசிவராத்திரி விரதம் அநுஷ்டிக்கும் ஆத்ம கோடிகள் அடையும் பலன்:—

மேற்படி விரதம்-பத்தி சிரத்தை வைராக்கியத்தோடு நிஷ்காமியமாய் அநுஷ்டிப்பவர்கள் இம்மையில் சற்சன தானாதி சௌபாக்கிய சம்பத்தும், மறுமையில் சொற்காதி போகமும் அடைவர்.

நிஷ்காமியமாயனுஷ்டிப்பவர்கள் - இஹத்தில் புத்தியும், பரத்தில் - களத்திர - புத்திர-மித்திராதிகள் சகிதமாய் முத்தியும் அடைவார்கள்.

இவ்விரதம் - அநுஷ்டிப்பவர்கள் - ஜனனாதி மரண பரியந்தமாவது-மத்தியில்-இருபத்து நான்கு-அல்லது பன்னிரண்டு - வருஷமாவது அநுஷ்டித்தால் மேலெழுதிய பலனைத்தருமென மேலெழுதிய ஆகமங்களில் விதித்திருக்கின்றது.

சிவராத்திரியின் காரணம்.

மேற்படியாகமங்களில் விதித்திருக்கின்றது.

அஃது

பிரமதேவனும் விஷ்ணுமூர்த்தியும் தங்களுக்குத் தாங்கள் ஒருவாதுசெய்து தன்னைத்தேடினபோது பரம

Koviloor Digital Library

சிவந்திருவுளமிரங்கி மாசி மாதம் கிருஷ்ணபட்சம் சதுர்த்தசி சோமவாரந் திருவோண நக்ஷத்திரமுங்கூடிய புண்ணிய தினம். இராத்திரி பதினாலு நாழிகையில் மேற்படி ஸ்தாணுவில் நின்றும் மஹேசுவர மூர்த்தமாக அடியுமுடியுங் காட்டாமல் பிரமவிஷ்ணுக்களுக்குத் தரிசனந் தந்து இவர்க்குடைய சரித்திரத்தை விசாரிக்குமிடத்திற் பிரமதேவர் பரமசிவத்தின் திருமுடியைத் தரிசித்ததாகப் பொய்யும், விஷ்ணுமூர்த்தியானவர் திருவடியைத் தரிசிக்கவில்லை என்று மெய்யும் விளம்பினபடியால் 'பிரமதேவருக்கு ஆலயமில்லாமற் போகக்கடவது' என்று சாபமும், விஷ்ணுமூர்த்திக்கு ரட்சகர்த்தத்துவம் உண்டாகக் கடவது என்று ஆசீர்வாதமும் அனுக்கிரகம் பண்ணியதுமன்றி அத்தரிசனமாவது ஒரு முகூர்த்தம் அப்படியே திகழ்ந்து மற்றத் தேவர்களெல்லாம் தரிசித்தமையால் - லிங்கோற்பவ காலமோ ந முகூர்த்தமென்று மேற்படி ஆகமங்களில் விதித்திருப்பது மல்லாமல் இராத்திரி காலத்தில் பரமசிவம் மஹேசுவர முகூர்த்தமாயுதித்த படியினுலே சிவராத்திரியென்று நாமதேயம் வந்தது.

பரமசிவமானது அக்கினி ஸ்தாணுவில் நின்றும் உற்பத்தியானதாலும் அந்த ஸ்தாணுலிங்க சுவரூபமானதாலும் லிங்கத்தில் நின்றும் மஹேசுவர மூர்த்தமா யுற்பத்தியானதாலும் லிங்கோற் பவமென்று நாமதேயம் உண்டாயிற்று.

இந்த மஹேசுவர மூர்த்தியை சிவாலயங்களில் மஹாலிங்கமூர்த்தி யெழுந்தருளி யிருக்கின்ற கர்ப்பக் கிரஹம் அந்தராளங்களில் நியமித்திருக்கின்ற பஞ்ச கூடங்களில் தரிசிக்கத் தெரியவரும்.

சிருஷ்டியிலடங்கிய அணுபட்ச - பிரம - விஷ்ணு - ருத்திர மூர்த்திகளானதாலும் சிவராத்திரி காலவரையில்

Koviloor Digital Library

இவர்களுக்கு-சிருஷ்டி-திதி-சங்காரமாகிய மூன்று கிர்த்தியங்களு மில்லாதிருந்தமையாலும் சிவராத்திரி காலந் தொட்டு விஷ்ணுமூர்த்திக்கு சம்புயட்ச பரமசிவமானது ரட்சகர்த்தத்துவம் நடத்தும்படி அநுக்கிரகஞ் செய்தருளியது காரணம்.

இதனுண்மையை வேதாகம புராண வாக்கியங்களிற் காண்க. மஹாசிருஷ்டி யென்பது வேர் முதலான சிருஷ்டி.

உற்பலம் -	என்பது -	ஜனித்தல்
தேகம்	,,	சரீரம்.
தேகி	,,	ஆத்துமா.
பாரணம்	,,	பட்டினிதவிழ்த்தல்.
பரிவாரம்	,,	சுத்துதேவதைகள்.
துவாரபூசை	,,	வாயிற்பூசை.
பலி	,,	இரை.
அஷ்டோத்தரசதம்	,,	நூற்றெட்டு.
கலசம்	,,	கும்பம்.
ஸதபனங்கம்	,,	கும்பபூசை.
மேகம்	,,	பரிமளதிரவியங்களிலொன்று
யதாவிதி	,,	எப்பொழுதும்போல்.
ஆபூபம்	,,	பணிகாரவகை.
சித்திரான்னம்	,,	பலசுவையன்னம்.
கோ	,,	பசு.
பூ	,,	பூமி.
புத்தி	,,	போகம்.
முத்தி	,,	மோக்ஷம்.

Koviloor Digital Library

பிரதோஷ காரணம்.

சகலாகம சங்கிரகம்-உத்தர காரணம் என்னும் இவ்விரண்டு ஆகமங்களிலும் விதித்திருக்கின்றது.

பிரதோஷ விதானம்.

சதாசிவமானது - சண்முக மூர்த்திக்குப் போதித்தல்.

அஃது

சுரரும்-அசுரரும் திருப்பாற்கடல் கடைய எத்தனித்து மந்தர்கிரி யென்னும் பர்வதத்தை நிலமத்தாகவும், வாசுகி யென்னும் ஆதிசேஷனை நாணுகவும் பிணித்துச் சுரர் ஒருபுறமும், அசுரர் ஒருபுறமுமாக நின்று கடையும்போது அக்கடலினின்றுங் கற்பக விருக்ஷ முதலானதுகளுங் காமதேனுவும் ஸ்திரீ ரத்தினம்-புருஷ ரத்தினம்-புட்ப ரத்தினம் - மிருகரத்தினம் - நாஞுவிதமான சித்திர விசித்திர ஆபரணங்களும்-நவரத்தினங்களும் உண்டானதுமன்றியில் மேற்படி நாணுகிய வாசுகி என்னும் பாம்பு மேற்சொல்லப்பட்டவர்கள் வருத்தும் உபத்திரவம் பொறுக்கமாட்டாமல் ஆலால மென்னும் விஷத்தைக் கக்கிற்று. அப்படிக் கக்கப்பட்ட விஷமானது அக் கடலினின்றும் அதிவேகமாகப் புறப்பட்டதைக் கண்ட சுரர் முதலானவர்களெல்லாம் நடுநடுங்கி ஷெடி விஷத்தின் குரூரத்தைச் சகிக்கமாட்டாமல் பரமேச்சுரத்தை நோக்கிச் சுவாமி இவ்விஷமானது எங்களை ஹதம்பண்ணிப்போடுமே நாங்கள் என்னசெய்யப் போகிரேரம் என்று முறையிட்டபோது பரமேச்சுரர் திருவுளமிரங்கிப் பயப்படாதீர்களென்று அபயஸ்தந் தந்து மேற்படி சுரர் முதலானவர்களும் லோகாலோகங்களும் உய்யும் பொருட்டுத் திரயோதசி தினம் - ரஜனிமுக வேளையில் மேற்படி ஆலாலமென்னும் விஷத்தை யுட்கொண்டு சுரரை ரக்ஷித்து மேற்படி கடலிலுண்டான ரத்தினங்களைச் சுரருக்கு அநுக்கிரகம் பண்ணினர்.

Koviloor Digital Library

இரத்தின விவரம்.

விருட்ச ரத்தின வகை.

கற்பகம்-சந்தானம் - தேவதாரம் - மந்தாரம் - பாரி சாதம் ஆக - ரு.

ஸ்திரி ரத்தினம் என்பது லக்ஷிமி.
புருஷ ரத்தினம் ,, சந்திரன்
மிருக ரத்தினம் ,, வெள்ளையானை
புட்ப ரத்தினம் ,, பொன்னுலாகிய புட்பம்
வஸ்திர ரத்தினம் ,, பீதாம்பரம்
விதானம் என்பது உற்பத்தி
சுரர் - தேவர்
அசுரர் - இராக்கதர்
நாண் - கயிறு

ரஜனிமுகவேளை என்பது மஞ்சள் வெயில் காய்கிற வேளை.

பரமேச்சுரமானது-ஆலால விடத்தை யுட்கொண்ட போது அவ்விடமானது பரமேச்சுரத்தின் கண்டத்தி னின்று கண்டங் கறுத்தபடியால் நீலகண்ட பரமேச்சுரம் என்னும் நாமதேய முண்டாயிற்று.

பிரதோஷ கால நிர்ணயம்.

பூர்வகாரணம் - உத்தரகாரணம் - அம்சுமான்-சகலாகம சங்கிரஹம் என்னும் இந்நான்கு ஆகமங்களிலும் விதித்திருக்கின்றது. அஃது.

சுக்கிலபக்ஷம் திரயோதசியாவது, கிருஷ்ணபக்ஷம் திரயோதசியாவது, உதயாதி யுதயாந்தம் அறுபது நாழிகை இருப்பது உத்தமம்.

Koviloor Digital Library

உதயாதி முப்பது நாழிகை இருப்பது மத்திமம்.

உதயாதி இருபத்தாறேகால் நாழிகைக்குமேல் ஒரு விஞடியாவது இருப்பது அதமம்.

துவாதசி கலந்துவருகிற திரயோதசி-அதமாதமம்.

துவாதசி கலந்த திரயோதசி யென்பது - முதனுள் துவாதசி முப்பது நாழிகைக்குமேல் - திரயோதசி பிரவேசித்து மறுநாள் இருபத்தாறேகால் நாழிகை இருக்குமானுல், முதனுள் பிரதோஷ கிரியைகள் நடத்த வேண்டியது. ஒருவேளை மறுநாள் உதயாதி இருபத்தாறேகால் நாழிகைக்குமேல் ஒரு விஞடி நாழிகையாவது இருக்குமாகில் அன்றைய தினமே நடத்தவேண்டியது.

பிரதோஷகால விவரம்.

அஃது

திரயோதசி உதயாதி இருபத்தாறேகால் நாழிகை முதல் - ராத்திரி மூன்றேமுக்கால் நாழிகை வரைக்கும் - நாழிகை ஏழரை - இந்த நாழிகை ஏழரையில் ரஜனிமுக காலத்திற் சம்பவிக்கும் பிரதோஷ காலத்தை ஒப்புக் கொள்ளவேண்டியது.

அஃது

உதயாதி இருபத்தாறேகால் நாழிகை முதல் முப்பது நாழிகை வரைக்கும் நாழிகை மூன்றேமுக்கால்.

நாள்- கஙு. முகூர்த்தம் பதினறு.

இவற்றுள்,

மத்தியான முகூர்த்தம் எட்டு-மத்தியான முகூர்த்தம் எட்டில்-உதயாதி முதல் ஏழு முகூர்த்தத்தைக் கழித்து எட்டாவது முகூர்த்தம் பிரதோஷகாலம் என்றிக.

Koviloor Digital Library

இந்த முகூர்த்த மூன்றேமுக்கால் நாழிகையை - மூன்று பிரிவாகப் பிரிக்கப் பிரிவு ஒன்றுக்கு நாழிகை ஒன்றேகால்.

இம்மூன்று பிரிவுகளில் - முதற் பிரிவில் பிரதோஷம் நடத்துவது உத்தமம்.

இரண்டாம் பிரிவில் நடத்துவது மத்திமம்.

மூன்றாம் பிரிவில் நடத்துவது—அதமம்.

இம்மூன்று பிரிவினும் உண்டாகும் பயன் ஒன்றற்கொன்று பேதித்ததல்ல என்றறிக.

பரமசிவமானது - ரஜனிமுக பிரதோஷ காலத்தில் தேவதைகள் முதலியவர்களுக்கு அனுக்கிரகித்த தென்றும், அஸ்தமித்த மூன்றேமுக்கால் நாழிகையாகிய பிரதோஷ காலம் பரார்த்த சிவதரிசனத்துக்குப் பரியாய பக்ஷகால மென்றும் ஷை ஆகமங்களில் விதித்திருக்கின்றது.

இந்தப் பிரதோஷகால நிர்ணயமானது சிவாலயங் களுக்குஞ் சிவதரிசனம் பண்ணுகிறவர் களுக்கும், விரத மனுஷ்டிப்பவர்களுக்கும், ஆத்மார்த்த பூசை பண்ணுகிற வர்களுக்கும் விதித்திருக்கின்றது.

பிரதோஷம் என்பது முற்பவத்திற் செய்த தோஷ நிவாரணம்.

இதன் பயன்-வாக்கு மனோதீதமாயிருப்பதால் மேற் படி ஆகமங்களிலும் புராணங்களிலுங் கண்டுகொள்ள வேண்டியது.

Koviloor Digital Library

பரமசிவமானது - ரஜனிமுக பிரதோஷ காலத்தில் அனுக்கிரகஞ் செய்ததைப் பெற்றுக்கொண்ட தேவதைகள் முதலியவர்கள் அஸ்தமித்த பிரதோஷ காலவரையிற் பரம சிவத்தை விட்டு நீங்கச் சென்றமையால் ஷடி காலத்தையும் பிரதோஷ காலமென்றும் விதிக்கலாயிற்று.

கார்த்திகைமீ கார்த்திகை நக்ஷத்திரத் தீபவிதி.

காரணம் - காமியம் - விஜயம் என்னும் இம்மூன்று ஆகமங்களிலும் விதித்திருக்கின்றது.

கார்த்திகைமீ பூர்வபக்ஷம் கார்த்திகை நக்ஷத்திரத்தில் தீபம் வைக்கவேண்டியது.

கார்த்திகை நக்ஷத்திரத்துக்கு முன்னால் பரணி நக்ஷத்திரஞ் சாயுங்காலையில்-அதிவாச தீபத்தில் அக்கினி காரிய முதலானதுகள் மூலமாய் மேற்படி தீபத்தில் மஹாலிங்க மூர்த்தியை ஆவாஹநம்பண்ணி மேற்படி தீபத்தை மேற்படி சன்னிதானத்தில் தானே பூஜித்து வைத்து மற்றுநாள் சாயுங்காலையில் அர்த்த சூரிய மண்டல சமயத்தில் தீபதண்டஞ்சமைத்து வைத்திருக்கிற பிரமஸ்தானத்துக்குத் தீபம் முன்னும்-சோமாஸ்கந்தமூர்த்தி பின்னுமாக எழுந்தருளப் பண்ணிக்கொண்டு வந்து தீபதண்டத்தைச் சமஸ்காரப் படுத்தி மேற்படி தீபத்தைத் தண்டத்தில் வைத்து மேற்படி தண்டத்திற் கட்டியிருந்த சரகுகள் எரிந்தவுடனே மேற்படி தண்டத்தைச் சேதித்துவிடவேண்டியது.

தீபதண்டம் பிரமஸ்தானத்தில் நிறுத்தவேண்டியது.

பிரமஸ்தானம் என்பது.

ஆலயத்திற்கும் இந்திர திக்குக்கும் மத்திய ஸ்தானமாம்.

Koviloor Digital Library

தண்டவிதி.

உத்தமம்	....	தென்னமரம்
மத்திமம்	....	பனைமரம்
அதமம்	....	கமுகம்ரம்
அதமாதமம்	....	வாழைமரம் - மூங்கில்.

தண்டவுன்னதப் பிரமாணம்.

உத்தமம் - சுவாமி கெர்ப்ப கிரஹத்து விமாநாந்தம், மத்திமம்-ஷை விமாந களாந்தம். களாந்தமாவது - விமாநக் கழுத்து மட்டும்.

மேற்படி தண்டத்தோடு - தாலசுட்க பத்திரமுங் கட்டவேண்டியது.

தாலசுட்க பத்திரமாவது.

உலர்ந்த பனையோலை.

சுட்க பத்திரவிதி.

உலர்ந்த — தென்னோலை
உலர்ந்த — பனையோலை
உலர்ந்த — கமுகோலை
உலர்ந்த — வாழைச்சரகு
உலர்ந்த — அசோகப் பத்திரம்

தாழஞ்சரகு.

மேற்படி சரகுகளை ஷை தீபதண்டத்தில் விமாநம் போல் கட்டிக் கொளுத்தவேண்டியது.

தீபதண்டம் வைக்கவேண்டியதற்குக் காரணம்.

சுவாமிதேஜோ மயமாயெழுந்தருளிய பாவனை.

இந்தத்தீபம் - பர்வத தீரங்களுக்கு - நக்ஷத்திரம் - சமுத்திர தீரங்களுக்குப் பர்வம்—பிரமாணமுமாக-மேற்படி யாகமங்களில் விதித்திருக்கின்றது.

Koviloor Digital Library

கார்த்திகைதீபம் வைக்கவேண்டியதற்குக் காரணம்.

காரணம்-காமிகம் - விஜயம் என்னும் இம்மூன்று ஆகமங்களிலும் விதித்திருக்கின்றது.

கைலாயத்தில் பரமேசுவரரும் - பரமேசுவரியும் எழுந்தருளி இருக்கும்போது அவிடத்தில் ஏற்றியிருந்த நெய்த்தீபங்களில் ஒரு தீபம் அணைந்துபோகிற தருணத்தில் ஓர் எலியானது அதிலிருந்த நெய்யை அருந்தப் போன போது அவ் எலியின் முகமானது அணைந்து போகிற வர்த்தியைத் தூண்டிய மாத்திரத்திற் பிரகாசம் அதிகரித்ததினால் பரமேசுவரர் கிருபை கூர்ந்து அவ் எலிக்கு மானிட சரீரமும் பதினாறு பேறுந் தந்து லோகத்திற் சனிக்கும்படி கட்டளையிட்டது. அவ் எலியானதுலோகத்தில்சக்கிரவர்த்தியாய்ப் பிறந்து சகல ஐசுவரியத்தையும் அனுபவித்திருக்குங் காலத்தில் ஒருநாள் சிவதரிசனத்துக்குப் போக எத்தனித்துத் தன் ராஜ சின்னமுதலிய சகல ஆடம்பர விபவத்துடனே சிவாலயத்திற்குட் பிரவேசித்துப் பிரதக்ஷணம் வருகையில் அவ்விடத்தில் ஏற்றியிருந்த தீபத்தின் ஓர் கணம் இந்தச் சக்கிரவர்த்தியின் தேகத்திலொழுகிய மாத்திரத்திற் கணத்தால் அந்தச் சக்கிரவர்த்தியின் தேகமுழுமையும் இரணங்கண்டு வெகுகாலம் அவதிப்பட்டுக் கொண்டிருக்கும்போது ஒருநாள் பரமேசுவரர் திருவுளமிரங்கி சக்கிரவர்த்தியே நீ மிகவும் அகங்கரித்தவன் ஆகையால் இவ் விரணம் நம்மால் உனக்குண்டாயிற்று. நீ இன்று முதல் உத்தேசித்து நூறுபாரம் நெய் முதலிய பொருள்களால் ஆலயங்களுக்குத் தீபம் ஏற்றுவையேயானால் உனக்குச் சாயுச்சிய பதந்தருவோமென்று அசரீரியாய்த் திருவுளம் பற்றியதைக் கேள்வியுற்ற சக்கிரவர்த்தியானவர் ஆனந்தமடைந்து அக்

Koviloor Digital Library

கட்டளையின்படியே அன்றுமுதல் சிவாலயங்களிலும் மற்ற இருள்சூழ்ந்த ஆரணியங்களிலுஞ் சாணக் குப்பைமுதலிய இடங்களிலுந் தீபமேற்றிக்கொண்டு வருங்காலங்களில் ஒரு நாள் பரமேசுவரர் திருவுளமிரங்கிக் கார்த்திகைமீ பூர்வபக்ஷம் கார்த்திகை நக்ஷத்திரத்தில் தேஜோமயமா யெழுந்தருளி ஷடி சக்கிரவர்த்திக்குச் சாயுச்சியபத மளித்தது.

அக்காலத்திற் பரமேஸ்வரரின் தரிசனத்துக்கு வந் திருந்த பிரமாவிஷ்ணு முதலிய தேவதைகளெல்லாம் நடுநடுங் கிப் பரமேசுவரர் மஹா வுக்கிரத்துடனே - அக்கினிரூபமா யெழுந்தருளி இருப்பதால் - அவ்வுக்கிரவுஷ்ணந் தணியும் பொருட்டுப் பொரி அவல் நிவேதனம் பண்ணினர்கள். இந்தச் சக்கிரவர்த்திக்கு மாவெலிச் சக்கிரவர்த்தி யென்று பெயராயிற்று.

கணமென்பது — தீபத்திற் காய்ந்தொழுகுகிற நெய் அல்லது எண்ணெய்.

பாரமாவது நூறுயோசனையகலம்-அறுபது யோசனையுயரமு முள்ள ஓராடகம். இப்படி நூறுகொண்டது ஒருபாரம்.

இதுதேவமான அளவென்று பெயர்.

கணமென்பது — துளிக்குப்பெயர்.

சுட்கபுனை யென்பது — சொக்கப் பானையென்று வழங்குகிறது,

தீபாவலி.

நரகசதுர்த்தசி.

காமியம்-காரணம்-வாதுளம்-சுப்பிரபேதம் என்னும் இந்த நான்கு ஆகமங்களிலும் விதிக்கப்பட்டிருக்கின்றது.

Koviloor Digital Library

தீபாவலியென்பதன் பொருள் என்னவெனில் தீப வரிசை யென்பதாம்.

தீபம் வைக்கவேண்டிய காலம்.

ஐப்பசிமீ அபரபக்ஷம் சதுர்த்தசி - அருணோதயத்துக்குமுன் ஆறுநாழிகை முதற்கொண்டு தீபம் ஏற்ற வேண்டியது.

ஸ்நானஞ் செய்யவேண்டிய காலம்.

மேற்சொல்லிய சதுர்த்தசி அருணோதயத்துக்கு முன்னமாம்.

ஸ்நான விதி.

எண்ணெயில் மகாலட்சுமி ஆவாகனமும் - வெந்நீரில் கங்கை ஆவாகனமும் செய்து ஸ்நானஞ் செய்ய வேண்டியது.

ஸ்நான பலன்.

இம்மையில் வறுமைகள் நீங்கி அளவில்லாத செல்வமும் மறுமையில் கங்கா ஸ்நான பலனும் கிடைக்கும்.

ஸ்நான பிரிதி.

தேவர்களுக்கும் பிதிரர்களுக்குமாம்.

ஸ்நானஞ் செய்யவேண்டிய வரிசை.

பிராமணர்-க்ஷத்திரியர்-வைசியர்-சூத்திரர் முதலான வர்ணத்தாருமாம்.

ஸ்நானஞ் செய்யவேண்டியதற்குக் காரணம்.

நரகாசுரன் என்பவனாலே வருத்தமுற்றிருந்த தேவர்கள் அவன் இறந்துபோனபோது அந்த சந்தோஷத்தினால் மங்கல ஸ்நானஞ் செய்தார்கள்.

டோலோற்சவம்.

அல்லது திருவூசலுற்சவம், உத்தரகாரணம் சகலாகம சங்கிரகம் என்னும் இவ்விரண்டாகமங்களினும் விதித்திருக்கின்றது.

Koviloor Digital Library

இது பராசத்தியானவர் தமது இஷ்டகாமியஞ் சித்திக்கவேண்டுமென்று பரசிவத்தைக் குறித்து விரதங் கொண்டருளிய வுற்சவம்.

இது செய்யவேண்டிய நாளின் அளவு.

உத்தமம்

மார்கழிமீ பூர்வபக்ஷம் சஷ்டி சதய நக்ஷத்திர முதல் பூர்ணமி திருவாதிரை நக்ஷத்திர வரைக்கும்

நாள் .... பத்து

மத்திமம்

நாள் .... ஒன்பது

நாள் .... ஏழு

அதமம்

நாள் .... ஐந்து

நாள் .... மூன்று

அதமாதமம்

நாள் .... ஒன்று

இவ்விரத உற்சவம் திருவாதிரை கழிந்த மூன்று தினம் நடத்தும்படி பரியாய பக்ஷமாக மேற்படி ஆகமங்களில் விதித்திருக்கின்றது.

உற்சவ கிரமம்.

இந்தத் தினங்களில் நாள்தோறும் உதயகாலத்தில் விநாயகமூர்த்திக்கு உற்சவம் நடத்தவேண்டியது.

மத்தியான காலங்களில் சுமங்கிலிகளுக்கு நல்ல போசனஞ் செய்வித்து ஆடையாபரணங்கள் கொடுத்துப் பூஜிக்கவேண்டியது.

சாயுங்காலையில் பராசத்தியாருக்குத் திருவுசவுற்சவம் நடத்தவேண்டியது.

இராத்திரி காலங்களில் பராசத்தியாருக்கு வாஹன உற்சவம் நடத்தவேண்டியது.

Koviloor Digital Library

டோளவிதி அஃது

எண்வகை டோளம் - அதாவது

ரத டோளம் — இது தேர் போலவும்
சக்கிர டோளம் — இது விருத்தமாகவும்
கெஜ டோளம் — இது குதிரை போலவும்
வாஜ டோளம் — இது யானை போலவும்
ஸ்தம்ப டோளம் — இது ஸ்தம்பம் போலவும்
மஹா டோளம் — இது விஞேதமாகவும்
யுகம டோளம் — இது இரண்டிரண் டிணைந்ததாகவும்
நர டோளம் — இது மனிதனைப்போலவும்
அலங்காரம் செய்யப்படும்.

டோளஞ்சமைக்கவேண்டிய முறைமையைச் சிற்ப சாஸ்திரங்களிற் காண்க.

டோளஞ் சமைப்பதற்கு வேண்டிய திரவிய விபரம்.

நவரத்தினம், பொன், வெள்ளி, பட்டுவஸ்திரங்கள்.

இவைகளால் டோளங்களைச் சமைத்துப் பொற் கொலுசுகளாலும், வெள்ளிச் சங்கிலிகளாலும், பட்டுக் கயிறுகளாலும் தூக்கவேண்டியது.

உத்தமம் .... பொற்கொலுசு
மத்திமம் .... வெள்ளிக் கொலுசு
அதமம் .... செம்புக் கொலுசு
அதமாதமம் .... பஞ்சவன்னப்பட்டுக்கயிறு

பராசத்தியாரை இந்தப் பத்துநாளுஞ் சாயுங்காலே யில் இவ்எண்வகை யூசலிலும் எழுந்தருளப்பண்ணிப் பன்னிரண்டு, எட்டு அல்லது நான்கு உருத்திர கணிகை யரைக்கொண்டு அசைக்கச் செய்தும் அக்காலத்தில் அடி

Koviloor Digital Library

யவர்களாலே திருவூசல் முதலான தோத்திரங்களைத் துதிக்கச் செய்து மேற்படி திருவூசலுற்சவம் நடத்த வேண்டியது.

வாகந கிரமம்.

முதல் நாள்	புலி.	ஆறும் நாள்		சிவிகை
உ-ம்	,,	கிளி.	௭-ம் ,,	மஞ்சம்.
௩-ம்	,,	புரு.	௮-ம் ,,	குதிரை.
௪-ம்	,,	சிங்கம்.	௯-ம் ,,	இடபம்.
௫-ம்	,,	அன்னம்.	௰-ம் ,,	புட்பவிமானம்

இவ்வண்ணமாக நடத்தவேண்டியது.

டோளத்துக்கிடவேண்டிய அறைக்கட்டுவிதி அறை....அ

விவரம்.

அறுபத்துநான்கு ஸ்தம்பமும் அதற்கு வேண்டிய விட்ட் முதலியதுகளுமாம்.

அறைகளின் அளவு.

ஒவ்வொன்று எட்டு முழச்சதுரத்திற்குச் சதுரமும் உன்னதமுமாக இருக்கவேண்டும். அதற்கு வாசற்படி அகலம் முழம் நான்கு, உயரம் முழம் ஆறு, இவ்வாசற்படி நீளச் சதுரமாயிருக்கவேண்டியது. ஸ்தம்பக் கனம் இரு புத்துநாலங்குலக் கனமிருக்கவேண்டியது.

இவ்வறைகள் ஒவ்வொன்றுக்கு ஒவ்வொரு சிகரம் வைக்கவேண்டியது. இவ்வறைகள் ஒன்ருேடொன் றிணைந்ததா இருக்கவேண்டியது.

சீதாலம், கரதாலம், கமுகு, தெங்கு, புன்னை, சண்பகம், இவை முதலிய ஸ்தம்பங்களையும் நட்டு இவைமுதலிய விட் டங்களுங் கட்டவேண்டியது.

Koviloor Digital Library

மேற்படி அறைகளின் அலங்கார விபரம்:— ஷடி விருக்ஷங்களின் புட்பங்களாலும் மற்றச் சித்திர விசித்திர புட்பங்களாலும் இடையில் பஞ்சவர்ன்னப் பட்டு வஸ்திரங் களாலும் வாழைப் பழச் சீப்புகளாலும் மேற்படி தாறு களாலும் எலுமிச்சை நாரத்தை கிச்சிலி தமர்த்தை பலா கருப்பங்கோல் இளநீர் இவைகளாலும் அலங்கரிக்க வேண்டியது. பராசத்தியானவர் பத்துதினமும் மேற்படி அறைகளினிடமாக எண்வகைஊசல்களிலும் விரதஉற்சவங் கொண்டருளுங் காலத்திற் பத்தாநாள் சாயுங்காலையிற் பர மேசுவரர் சோமாஸ்கந்த மூர்த்தமாயெழுந்தருளிப் பராசக்தி யோடு தாமுந் திருவூச லுற்சவங் கொண்டருளிப் பராசத்தியாருக்கு இஷ்டகாமிய சித்தியனுக்கிரகஞ் செய் தருளினர்.

இந்த உற்சவங் கொண்டருளுந் தேவியாருக்குப் பராசத்தி யென்றும், வீரசத்தி யென்றும் நாமதேயம்வந்த வரலாறு ஆகமங்களிலும் சிற்ப சாத்திரங்களிலும் கண்டு கொள்ளவேண்டியது.

வீரசத்தியாருக்கு இவ் விரதோற்சவம் பணிவிடை நடத்தும் ஆன்மகோடிகளுக்கு இப்பிறப்பில் இஷ்டகாமிய சித்தியையும் மறுமையில் சிவசாயுச்சியப் பயனேயுந் தருவார்.

பராசத்தியாருடைய மகா விரதோற்சவத்திற்கும் ஆருத்திரா தரிசன் மகாஉற்சவத்திற்கும் யாதொருதொடர்ச் சியுமில்லே. இந்தப் பத்துத் தினமும் மாணிக்கவாசக மூர்த்திகளுக்காவது உற்சவாதிகள் நடத்தும்படி இருபத் தெட்டு ஆகமங்களிலுத் விதித்திருக்கவில்லே. ஆனல்,

இப்போது சிவாலயங்கள் தோறும் மாணிக்கவாசக சுவாமிகளுக்கு உற்சவம் நடத்திவருவது காரணச்சிறப்பாய் நடந்து வருகின்றது.

Koviloor Digital Library

பராசத்தியாருக்கு விரதோற்சவமானதால் துவஜாரோகண முதலானதுகள் நடத்தும்படி ஆகமங்களில் விதித்திருக்கவில்லை.

ஆருத்திரா தரிசனம், சிருஷ்டி, ஸ்திதி, சங்காரம், திரோபவம், அனுக்கிரகம் என்னும் பஞ்சகிர்த்தியங்களைப் பற்றியதாயிருக்கின்றது. அதன் விவரம்.

நடேசர்.

பீடத்தை விட்டு எழுந்தருளுவது சிருஷ்டி. ரக்ஷா பந்தனந் தரிப்பது ஸ்திதி. கிருஷ்ண கந்தந் தரித்துக்கொள் வது சங்காரம். வெள்ளை சாத்திக்கொள்வது திரோபவம். உற்சவங் கொண்டருளுவதும் மட்டையடி அடிப்பதும் அனுக்கிரகம். அகங்கரித்த அசுரனைச் சங்கரித்தபோது அவர் களுடைய சரீரங்கறுத்த பஸ்பமாச்சுது. அதைத் திலகமாகத் தரித்துக்கொண்டார். அந்தப் பாவனையாகக் கிருஷ்ண கந்தஞ் சாத்துவது. கிருஷ்ணகந்தமாவது-சாந்து.

அந்தச் சங்காரத்தின்போது திருமேனி அதிகவுக் கிரமாக விருந்தது. அது தணியும்பொருட்டுத் தேவர் கள் அந்தத் திருமேனியை வெள்ளை வஸ்திரத்தினும் வெள்ளைப் புட்பத்தினும் மறைத்தார்கள். அந்தப் பாவனை யாக வெள்ளை சாத்துவது. இதன் விரிவை ஆகமங்களிற் கண்டுகொள்க.

இந்த உற்சவம் அறைக்கட்டு உற்சவம் என்று வழங்குகின்றது.

சங்கிராந்தி.

'அமிசுமான்' என்னும் ஆகமத்தில் விதித்திருக்கின்றது.

Koviloor Digital Library

மகரா சங்கிரமே சக்தி.

என்னும் சக்தியானவள் ஆடி மாத முதல் மார்கழி மாத வரைக்கும் தக்ஷிணாயனமாகிய ஆறு மாதமும் மனிதருக்கு மூதேவி ரூபமாயும், பசுக்களுக்குப் புலி ரூபமாயும் பீடித்துக்கொண்டிருந்தாள். அந்தப் பீடை நிவாரணமாகி மனிதர் சௌக்கியத்தை அடையும் பொருட்டுத் தை மாதம் முதல்தேதி மகர சங்கிராந்தி உத்தராயண புண்ணிய தினத்தில் சூரிய தேவர் முதல் பிரம விஷ்ணு ருத்திரன் மஹேசுவரன் சதாசிவன் முதலான தேவதைகளைப் பூசித்து அலவணமாகப் பாற்பொங்கல் பண்ணி மேற்படி தேவதைகளுக்கு நிவேத்தியம்பண்ண வேண்டியது மல்லாமல் பிதிர் தேவதைகளுக்குத் திலதர்ப்பண முதலானதுகளும் பண்ணி வேதியருக்குக் கோதானமுதல் தசதானமும் கெஜதான முதல் சோடசமஹாதானமும் பண்ண வேண்டிது. மேற்படி காலம் ஆறுமாதமும் நாடும் வீடும் மூதேவியடைந்திருந்த படியால் ஷை உத்திராயண புண்ணிய தினத்தில் கிராமசாந்தியும் வீடுசுத்தியும் பண்ணி மேற்படி நிவேதன முதலானதுகளைப் புதிய பாண்டங்களிற் பண்ணுவது மல்லாமல் ஷை தக்ஷணாயன காலங்களில் ஆண்டு கொண்டிருந்த பழைய பாண்டங்கள் முதலான முட்டுகளையும் நிவர்த்தி செய்யவேண்டியது. மற்றுநாள் சாயுங்காலையில் பசுக்களுக்கு ஸ்நான முதலிய அலங்காரம் பண்ணியும் ஆலயத்தில் சுவாமி உற்சவங் கொண்டருளப் பண்ணியும் பசுக்களை முன் துரத்திப் பின்னே சுவாமியை எழுந்தருளப்பண்ணவேண்டியது.

இப்படி நடத்துவதற்குக் காரண மென்னவெனில் புலிகளானது ஷை ஆறுமாதமும் பசுக்களைச் சங்கரித்துப்

Koviloor Digital Library

புசித்துக்கொண்டிருந்தபடியால் அன்றையதினஞ் சாயுங் காலையில் பரமசிவன் பசுக்களைக்கொண்டு புலிகளைத் துரத்தச் செய்து மேற்படி புலிக் கூட்டங்களைச் சங்கரித்ததுமன்றி மேற்படி சக்தியையும் ஹதம் பண்ணி மனிதருக்கும் பசுக் களுக்கும் சவுக்கியத்தைத் தந்தருளினர்.

இதன் பயன் சகல ஐசுவரியமும் உண்டாமென்பதாம்.

போகி பண்டிகை காரணச் சிறப்பாக நடந்து வரவேண்டியது.

அலவணம் என்பது உப்பில்லாமை.

மாத பூசை.

ஐப்பசிமீ பர்வதினம் சாயங்காலம் சிவாலயங்கள் தோறும் அன்னபிஷேகம் நடக்கின்றது. அதன் காரணத்தை விசாரிக்குமளவில் தெரிவது என்னவெனில்.

மார்கழிமீ முதல் கார்த்திகைமீ வரையில் மாதந் தோறும் வருகிற பர்வத்தில் நெய் முதலாக ஒவ்வொரு பொருளால் அபிஷேகஞ் செய்தல் இதற்கு மாத பூசை என்று பெயராம். மார்கழி மாதம் முதலாகச் சொல்லுவது என்ன வென்றால் அந்த மாதந் தேவர்களுக்கு விடியற்கால மாகையாலென்றறிக.

அம்சுமதி என்கிறவர் சூரியனுக்கு போதித்தல்.

சகலாகம சங்கிரகத்துள் சிதம்பர ரகசியம் சிவலிங்க மூர்த்திக்குச் செய்கிற மாத பூசை விவரம் அபிஷேகம் வஸ் திரம் ஆபரணம் புஷ்பம் நிவேதன முதலானதுகளைக் குறித்துச் சொல்லுகின்றது.

Koviloor Digital Library

மார்கழி மாதம் பர்வதினத்தில் நெய் அபிஷேகம், பொன் சரிகை வஸ்திரம், நூறு பொன்மணிமாலை ஆபரணம், தும்பை மலர், பச்சைப் பயற்றுப் பொங்கல் நிவேதனம், இதன் பயனாவது மோக்ஷம்.

தை மாத பர்வதினத்தில் தேன் அபிஷேகம், வெள்ளிச் சரிகை வஸ்திரம், நூறு வெள்ளிமணிமாலை ஆபரணம், நந்தியாவர்த்தமாலை, பாற்பொங்கல் நிவேதனம், இதன் பயன் ஆயுள் விர்த்தி.

மாசி மாத பர்வதினத்தில் நெய்யிற்றோய்த்த வெண் கம்பளம், வெண்பட்டு வஸ்திரம், நூறுபடிகமணிமாலை ஆபரணம், செந்தாமரைப்பூ, சருக்கரைப் பொங்கல் நிவேதனம், இதன் பயன் ஆரோக்கியம்.

பங்குனி மாத பர்வதினத்தில் தயிர் லேபனம், மஞ்சள் பட்டுவஸ்திரம், நூறு வச்சிரமணிமாலை ஆபரணம், மகிழம்பூ, பிட்டு நிவேதனம், இதன் பயன் ஐசுவரியம்.

வைகாசி மாத பர்வதினத்தில் சந்தனம் லேபனம், மகிழம்பூநிற பட்டுவஸ்திரம், நூறு பத்மராகமணிமாலை ஆபரணம், கடப்பம்பூ, எள்ளன்னம் நிவேதனம், இதன் பயன் சாலோகபதம்.

ஆனி மாத பர்வதினத்தில் முப்பழ முதலிய பழங்கள் தாரணம், பச்சைப் பட்டுவஸ்திரம், நூறு மாணிக்க மாலை ஆபரணம், பாதிரிப்பூ, மஞ்சள்பொடி சேர்ந்த அன்னம் நிவேதனம், இதன் பயன் சிந்திதமனோரதசித்தி.

Koviloor Digital Library

ஆடி மாத பர்வதினத்தில் திரட்டுப்பால் லேபனம், கறுப்புப் பட்டுவஸ்திரம், நூறு முத்துமணிமாலை ஆபரணம், கருமத்தைப்பூ, மூங்கிலரிசிப் பாயாச நிவேதனம், இதன் பயன் சத்துருநாசம்.

ஆவணி மாத பர்வதினத்தில் சர்க்கரை தாரணம், மாதுளம்பூநிறப் பட்டுவஸ்திரம், நூறு பவழமணிமாலை ஆபரணம், மல்லிகைப்பூ, கோதும்பைப் பாயாசம் நிவேதனம். இதன் பயன் இகலோக காமியம்.

புரட்டாசி மாத பர்வதினத்தில் அபூபம் தாரணம், அதாவது அதிரசம், வடை, சுசியம், மற்றுஞ்சிலது ஊதா சிவப்புப் பட்டுவஸ்திரம், நூறு புட்பராகமணி ஆபரணம், மிளகோதனம் நிவேதனம், இதன் பயன் தனப்பிராப்தம்.

ஐப்பசி மாத பர்வதினத்தில் அன்னதாரணம், பொற்கொன்றைப்புஷ்பநிறப் பட்டுவஸ்திரம் நூறு வைடூரியமணி மாலை ஆபரணம், கத்திரிப் புஷ்பம், பழவகை சேர்ந்த பொங்கல் நிவேதனம், இதன் பயன் தர்மார்த்தகாமிய மோக்ஷம்.

பழவகை பொங்கலுக்கு விவரம்.

கதலி, பலா மற்றுஞ் சிலதுகள்.

கார்த்திகைமீ பர்வதினத்தில் தீபதரிசனம், சித்திரப் பட்டுவஸ்திரம், நூறு பச்சைமணி ஆபரணம், கருநெய்தல் புஷ்பம், நெய்ப்பொங்கல் நிவேதனம், இதன் பயன் பிர்மத்தியாதிதோஷ நிவாரணம்.

லேபனம் என்பது பூசுதல். தாரணம் என்பது தரிப்பது.

Koviloor Digital Library

நடேசாயநம.

பஞ்சகிர்த்திய மஹோற்சவம்.

சகலாகம சங்கிரஹம் என்னும் ஆகமத்தில் விதித்திருக்கின்றது.

மார்கழிமீ முதல் கார்த்திகைமாதம் வரைக்கும் பன்னிரண்டுமாதமும் மகோற்சவம் நடத்தத் தக்கது.

அதாவது

உத்தமகிரயம் - மத்திமகிரயம் - அதமகிரயம் என மூவகையாக விதித்திருக்கின்றது.

உத்தமகிரயத்திற்கு நாட்கள் ௰எ - ௰௫ - ௰௩,
மத்திமகிரயத்திற்கு நாட்கள் ௰௩ - ௰க - கூ,
அதமகிரயத்திற்கு நாட்கள் எ - ௫ - ௩.

இம் மூவகை நாட்களில் உத்தம கிரயத்திற்கும் மத்திம கிரயத்திற்கும் துவஜாரோகணம் நடத்தவேண்டும்.

அதமகிரயத்திற்குத் துவஜாரோகணம் நடத்த வேண்டியதில்லை. ரக்ஷாபந்தன பூர்வமாக நடித்த வேண்டியது.

உத்தம கிரய முதலியவைகட்கு நியமித்த மூவகை நாட்களிலும் துவஜா ரோகணத்திற்கு எந்தத்தினம் உத்தேசிக்கப்படுகின்றதோ அந்த நாட்களின் அந்திய தினத்தில் தீர்த்தமகோற்சவம் நடத்தவேண்டும்.

திதியிலாவது நக்ஷத்திரத்திலாவது திதியும் நக்ஷத்திரமுங் கலந்த தினத்திலாவது தீர்த்தமகோற்சவம் நடத்த வேண்டும்.

அந்தத் திதியிலாவது அதற்கு முன்னுளாவது பின்னுளாவது வருகிற நக்ஷத்திரத்திலுமென்றறிக.

சமுத்திரதீர ஆலயத்திற்குத் திதியும், பர்வததீரத்திற்கு நக்ஷத்திரமும், நதிதீரத்திற்குத் திதியும் நக்ஷத்திரமுமாம்.

Koviloor Digital Library

மாசி மாதம் சுக்கிலபக்ஷத்துச் சஷ்டி திதியிலும் ஆனி மாதம் கிருஷ்ணபக்ஷத்து அஷ்டமி திதியிலும் தீர்த்த மகோற்சவம் நடத்தலாம். மேலெழுதிய இரண்டு மாதங் களின் திதியிலும் நக்ஷத்திரத்திலும் தீர்த்தம் நடத்தலாம்.

பதினேழு தினம் நடத்துகிற மகோற்சவத்திற்குக் கிருஷ்ண பக்ஷத்தில் ஆரம்பிக்கவேண்டியது. மற்றவை களுக்குச் சுக்கில பக்ஷத்தில் ஆரம்பிக்கவேண்டும்.

அன்றியும் மேலெழுதிய தீர்த்தோற்சவம் பன்னி ரண்டு மாதங்களிலும் ஆசாரியருடைய நக்ஷத்திரத்திலாவது கிராம நக்ஷத்திரத்திலாவது தருமகர்த்தாவினுடைய நக்ஷத் திரத்திலாவது தருமகர்த்தாவினுடைய அபீஷ்ட நக்ஷத் திரத்திலாவது நடத்தலாம்.

இவைகளுக்குள் தீர்த்தோற்சவத்திற்கு ஒற்றுமை யான பட்சத்திலாவது திதியிலாவது நக்ஷத்திரத்திலாவது உற்சவம் ஆரம்பிக்கப்படும்.

பஞ்சகிர்த்தியம் என்பது சிருஷ்டி, திதி, சங்காரம், திரோபவம், அனுக்கிரகம் ஆ-ரு.

அங்குரார்ப்பணம், திருக்கல்யாணம், துவஜாரோ கணம், ரட்சாபந்தனம் இந்த நான்குஞ் சிருஷ்டிகிர்த்தியம்.

வாஹனோற்சவம், ஓமகர்மம், பலியிடுதல் இம் மூன்றும் திதிகிருத்தியம்.

சூர்ணோற்சவம், ரதாரோகணம், கிருஷ்ண கந்தோற் சவம் இம்மூன்றுஞ் சங்கார கிர்த்தியம்.

மௌனோற்சவம், திரோபவ கிர்த்தியம்.

சக்தி, யாத்திரோற்சவம், தீர்த்தோற்சவம் இவ் விரண்டும் அனுக்கிரக கிர்த்தியம்.

Koviloor Digital Library

பஞ்சகிர்த்திய மகோற்சவத்திற்கு நியமித்த ஒன்பது பக்ஷத்து நாட்களிலொன்ருகிய பதிஞெரு தினம் நடத்த வேண்டிய உற்சவத்தின் யாக முதலான யானக்கிரமத்தின் விவரம்.

பஞ்சகிர்த்திய மகோற்சவம்.

முதனாள்	- காலை விழா	- சிவிகை	ராத்திரி விழா	- சிங்கம்
உ	,,	சூரியவிர்த்தம்	,,	சந்திரவிர்த்தம்
௩	,,	அன்னப்பட்சி	,,	பூதம்
௪	,,	சேஷவாகனம்	,,	கமலம்
௫	,,	மயூரம்	,,	இடபம்
௬	,,	யானை	,,	இராவணன்
௭	,,	இரதம்	,,	யாளி
௮	,,	புலி	,,	குதிரை
௯	,,	மஞ்சம்	,,	கேடகம்
௰	,,	பத்திரபீடம்	,,	சிங்காதனம்
௰௧	....	....	,,	இந்திர விமானம்.

மேலெழுதிய காலங்களுக்கு வாகனமில்லாவிட்டால் காலா காலங்களுக்குச் சிவிகையின்மீது எழுந்தருளப் பண்ண வேண்டியது.

உடுப்போற்சவம் அல்லது தெப்போற்சவம்.

விஜயம் என்னும் ஆகமத்தில் விதித்திருக்கின்றது.

பரமசிவமானது சூரிய மூர்த்திக்குப் போதித்தல் அதாவது:—

பஞ்சாசத்கோடி பூமண்டல விஸ்தீர்ணத்திலுமுள்ள சிவாலயங்களில் அந்தந்த சிவாலயங்களை யடுத்த ஏரிகளிலாவது தடாகங்களிலாவது பரமசிவம் உடுப்போற்சவம் கொண்டருளப்பண்ணவேண்டியது. அஃது அந்தந்தச்சிவாலயங்களில் மகோற்சவத்திற்குத் துவஜாரோகணம் பண்ணி

Koviloor Digital Library

அவரோகண முடிந்த மூன்று தினத்தில் உடுப்போற்சவம் நடத்துவது உத்தமம். ஐந்து தினத்தில் நடத்துவது மத்திமம். ஏழு தினத்தில் நடத்துவது அதமம். பதினைந்து தினத்தில் நடத்துவது அதமாதமம். இவ்வண்ணமாக நடத்துவதற்கு அசந்தர்ப்பம் நேரிடுமானால், சித்திரை முதல் பங்குனி மாத வரைக்கும் எந்த மாதத்திலாவது வருகிற பூர்ணமி திதியில் நேரிடுகிற அந்தந்த நக்ஷத்திரங்களில் நடத்துவது உத்தமம். அதற்கும் அசந்தர்ப்பமுண்டாகுமானால் அந்தந்த மாதம் சுக்கில பக்ஷம் அஷ்டமி தினத்தில் நடத்துவது மத்திமம்.

தெப்பமானது முப்பத்திரண்டு முழச் சதுரத்திற்குச் சதுரமும் நான்கு முழ உயரமுள்ளதாயிருக்கவேண்டும்.

தெப்பத்தின் விருக்ஷவிதி.

அது சலத்தில் மிதக்கத்தக்க பலவிதமான உலர்ந்த விருக்ஷங்களால் அணியணியா ஒன்றோடொன் றிணைத்துப் பலமுள்ள கயிறுகளாற் சமைக்கவேண்டியது. இதனைச் சமைக்கத் தக்கவர்கள் சாதுர்வருணத்திலுமுள்ள சைவ சமய பக்தசனங்களாம்.

தெப்பத்திற் சமைக்கவேண்டிய விமானவிதி பதினாறு முழச்சதுரத்திற்குச்சதுரம் எண்பதுமுழவுயரமுள்ளதுமாம்.

விமானஸ்தம்ப லக்ஷணம்.

இருபத்து நான்கு ஸ்தம்பங்களும் அதற்கு வேண்டிய விட்டங்களுமாம். இந்த விமானஞ் சதிர்ப்பந்தற் போலவும் அதற்குமேல் இரண்டு அல்லது மூன்று தளம் விமானம் போலவுஞ் சமைக்கவேண்டியது.

இதன் தம்பங்களும் விட்டங்களும் உடுப்பஞ் சமைத்த விருக்ஷ வகையோடொத்ததாம். அந்த ஆஸ்தானத்தில் மரத்தினாற் சிங்காதனங் கற்பிக்கவேண்டியது.

Koviloor Digital Library

மேற்படி விமானத்து நான்கு துவாரத்திற்கும் எட்டுத் துவ்ாரபாலர் - வேறுவேறு ரூபமாகக் கற்பிக்கவேண்டியது மல்லாமல் மேற்படி விமானத்தைச்சூழச் சித்திர விசித்திர விநோதமான - புருஷபிரதமைகளாலும்-ஸ்திரீ பிரதமைகளாலும் நானுவிதமான பறவைகளாலும் அலங்கரிக்க வேண்டுவது.

இந்தப்பிரதமைகள் சமைக்கவேண்டிய முறைமையை லீலா நாடக சிற்ப சாஸ்திரங்களிற் காண்க. மேற்படி விமனாத்தை நானுவிதமான சித்திரப்பட்டு வஸ்திரங்களாலும் பஞ்சவர்ணப்பட்டு வஸ்திரங்களாலும் கண்ணுடிகளாலும் சித்திர விசித்திர புட்பங்களினுலும் வாழைத்தாறுகளாலும் பாக்குக்குலைகளாலும் வாழைமரங்களாலும் கமுகுவிருக்ஷங் களாலும் வாழைப்பழச் சீப்புகளாலும் இளநீர்களாலும் கருப்பங்கழிகளாலும் குடைகளாலும் விசிறிகளாலும் சாமரைகளாலும் கொடிகளாலும் ஆலவட்டங்களாலும் தொங்கொளிவட்டத் தீபங்களாலும் நிலையொளி வட்டத் தீபங்களாலும் தூணெளிவட்டத் தீபங்களாலும் அலங் கரிக்கவேண்டியது.

இந்த வுற்சவஞ் சாயுங்காலம் இருபத்துநான்கு நாழிகைமுதல் ராத்திரி யேழரை நாழிகைவரைக்கும் நடத்தவேண்டியது.

இந்தவுடுப்பத்தையும் விமானத்தையுஞ் சமஸ்காரப் படுத்தி யுடுப்பத்தில் சுவாமியை யெழுந்தருளப் பண்ண வேண்டியது.

உற்சவ நடத்துவதற்கு முன்னமே சுவாமி தெப் பத்திலே யெழுந்தருளியவுடனே கொக்குகளைப் போலவும் மச்சங்களைப்போலவும் நெட்டிகளாற்செய்து சலத்தில்விட்டு வேடிக்கை நடத்திப் பின் உற்சவம் நடத்தவேண்டியது.

Koviloor Digital Library

உற்சவங் கொண்டருள வேண்டியது பஞ்சமூர்த்தி களுமாம்

பஞ்பமூர்த்திகளாவன - சோமாஸ்கந்தர் தேவியார் விநாயகர் - சண்முகர் - சண்டேசர் - ஆ - ரு.

இந்தப் பஞ்சமூர்த்திகளுக்கும் உடுப்போற்சவம் நடத்துவது உத்தமம்,

சந்திரசேகரமூர்த்திக்கு நடத்துவது மத்திமம்,
விநாயகமூர்த்திக்கு நடத்துவது அதமம்,
முருகருக்கு நடத்துவது அதமாதமம்.

ஏரியிலாவது தடாகத்திலாவது மூன்று, ஐந்து அல்லது எழு பிரதட்சணமாக உற்சவம் நடத்தவேண்டியது. பிரதட்சண காலத்தில் சுவாமிக்கு அஷ்ட சந்திகளிலும் தூபதீப முதலானதுகளோடு உபசாரம் நடத்தவேண்டியது.

இந்தப் பிரதட்சணமானவுடனே சுவாமியைத் தடாகமண்டபத்தில் எழுந்தருளச் செய்து இளநீர் நிவேதனம்பண்ணித் தூபதீப முதலான சோடசோபசாரமும் நடத்தி மேற்படி விமானத்தோடு கிராமப் பிரதட்சணம் பண்ணிச் சுவாமியைக் கோயிலில் எழுந்தருளச் செய்து சுவாமிக்கு ஸ்தபனுங்கத்தோடு அபிஷேகம் நடத்தித் தத்தியோதனந் திருப்பாவாடை நிவேதனம் பண்ண வேண்டியது.

அன்று மத்தியானம் சுவாமிக்கு ஆலயத்தில் அபிஷேக முதலானதுகள் நடத்திப் பஞ்சவித சித்திரான்னங்களோடும் அபூபங்களோடும் பழ வகைகளோடும் தாம்பூலத்தோடும் நிவேதனம் பண்ணவேண்டியது.

தடாகத்தைச் சுற்றி அஷ்ட திக்குகளிலும் குடைகளாலும் கொடிகளாலும் ஆலவட்டங்களாலும் மாவிலைத்

Koviloor Digital Library

தோரணங்களாலும் மற்றச் சித்திர விசித்திர தோரணங்களாலும் அலங்கரிக்க வேண்டியதுமல்லாமல் தடாகத்தில் மாணிக்கப் பட்டையும் அடிக்கவேண்டியது.

தெப்பத்தில் சுவாமிசன்னதிக்கு எதிரில் ஐந்து அரிச்சக தேசிகரால் பஞ்சாட்சரம் சடாட்சரம் பாசுபதாஸ்திரம் மிருத்தஞ்செய செபமுதலானதுகளால் செபஞ்செபிக்கச் செய்விக்கவேண்டியது.

இந்த உற்சவஞ் சுவாமிக்குச் சர லக்கினத்திலாவது உபய லக்கினத்திலாவது ஆரம்பிக்கவேண்டியது. ஸ்திர லக்கினத்தில் ஆரம்பிக்கும்படி விதியுண்டாயிருக்கவில்லை. தெப்பத்தில் சுவாமிக்குப் பின்னாலே நான்கு வேதங்களையும் பாராயணம் நடத்தவேண்டியது. உடுப்பத்திற்கு அஷ்டாதசவாத்தியங்களையும் பதினெட்டு ஜனங்களாற் கோஷிக்கச் செய்யவேண்டியது. உடுப்பத்திற்குத் தக்ஷிணத்தில் வீணாகானம் நடத்தவேண்டியது. உடுப்பத்திற்குப் பச்சிமத்தில் சங்கநாதங்கோஷிக்கச் செய்யவேண்டியது. உடுப்பத்திற்கு உத்தரத்தில் பதினாறு உருத்திர கணிகையரால் கானம் நடத்தவேண்டியது. தடாகத்து வெளியில் மகாபேரி முழக்கஞ் செய்யவேண்டியது. உடுப்பத்திற்கு அக்கினி மூலையில் பிரதிமை நாட்டியம் நடத்தவேண்டியது. சுவாமி உடுப்போற்சவத்திற்கு ஆலயத்தை விட்டு எழுந்தருளுங் காலத்தில் தசதான முதலானதுகள் நடத்தவேண்டியது.

உடுப்பத்தில் சுவாமிக்குச் சமீபவுபசாரம் பண்ணுகிற பக்த பரிசனங்கள் பதினாறு பேர்களுக்குமேல் அதிகமிருக்க விதியுண்டாகவில்லை.

இந்த உற்சவத்திற்குப் பிலவோற்சவம் என்றும் கோலோற்சவமென்றும், உடுப்போற்சவமென்றும், தெப்போற்சவமென்றும் பெயராம். இந்த உற்சவம் பரமசிவத்திற்கு நடத்தும் ஆன்மகோடிகளுக்குத் தருமார்த்த காமிய மோக்ஷத்தைத்தரும்.

Koviloor Digital Library

பரமசிவன் இந்த வுற்சவங்கொண் டருளுவதற்குக் காரணம்.

விஜயம் என்னும் ஆகமத்தில் விதித்திருக்கின்றது.

பரமசிவமானது பிபீலிகாதி பிர்மபரியந்தம் எண்பத்து நான்கு லட்சம் ஜீவபேதமான ஆன்மகோடிகளை நால்வகை யோனியில் எழுவகைத் தோற்றமாகச் சிருஷ்டித்து அவைகளில் நீர்வாழுஞ் செந்துக்களாகிய பத்து லட்சம் பேதமான பிராணி கோடிகளை ரட்சிக்கும்பொருட்டுக் கொண்டருளிய உற்சவம்.

எழுவகைத் தோற்றமாவது

வெண்பா.

ஊர்வபதினொன்று மொன்பது மானிடர்
நீர் பறவை நாற்காலோர் பப்பத்தாஞ் - சீரிய
பந்தமாந்தேவர் பதினாலயன் வகுத்த
வந்தமிருவர நாலைந்து ....

நால்வகை யோனியாவது:— அண்டசம், உற்பீசம், சுவேதசம், சராயுசம்.

அண்டசமென்பது - முட்டையினிடமாகவுற்பவிக்குதல்,
உற்பீசம் - வித்தினிடமாக வுற்பவிக்குதல்,
சுவேதசம் - வேர்வையினிடமாக வுற்பவிக்குதல்,
சராயுசம் - பையினிடமாக வுற்பவிக்குதல்.

சித்திரான்னமாவது:— சருக்கரைப் பொங்கல், பருப்புப் பொங்கல், புளியோதனம், ததியோதனம், மிளகோதனம் ஆக - ரு.

வியஞ்சனம் என்பது கறிவகை

அபூபம் என்பது பணிகாரவகை

தசதானம் என்பது பசு, பூமி, எள்ளு, வெள்ளி, நெய், வஸ்திரம், நெல், வெல்லம், வெண்கலம், உப்பு, ஆக - ய.

சைவசமய விரதாதி விளக்கக்கொத்து முதற் புத்தகம் முற்றிற்று முற்றும்.

Koviloor Digital Library

Koviloor Digital Library
KVC0728.

கழகச் சைவ வினாவிடை

முதற் புத்தகம்

விலை அணா 2½

❀

சித்தாந்த வினாவிடை

ஆறு உரையாடல்கள் அடங்கியது

விலை அணா 3

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்.

தலைமை: திருநெல்வேலி. :: 6, பவழக்காரத் தெரு, சென்னை.